
ஞானத்தின் ஆவி

# ஞானத்தின் ஆவி,
# வெளிப்பாட்டின் ஆவி
# மற்றும் வல்லமையின் ஆவி



ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**
ஆல் பீப்பிள் சர்ச் & வேர்ல்டு அவுட் ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது, பெங்களூர், இந்தியா.
தற்போதைய பதிப்பு: 2023

**தகவல் தொடர்புக்கு**
All Peoples Church & World Outreach,
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: **bookrequest@apcwo.org**
Website: **apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவை. 1982ல் தாமஸ் நெல்சன் Inc., என்பவரால் © காப்புரிமை பெறப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**
ஆல் பீப்பிள் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து apcwo.org/give என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள "ஆல் பீப்பிள் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்" என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**
**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil - The Spirit of Wisdom Revelation and Power)

ஞானத்தின் ஆவி

# ஞானத்தின் ஆவி,
# வெளிப்பாட்டின் ஆவி
# மற்றும் வல்லமையின் ஆவி

# பொருளடக்கம்


1. ஞானத்தின் ஆவி 1

2. வெளிப்பாட்டின் ஆவி 15

3. வல்லமையின் ஆவி 29

# 1
# ஞானத்தின் ஆவி

பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனுடன் இணைந்திருக்கும் தேவனாக இருக்கிறார். மேலும் அவர் பூமியின் மீது தேவனுடைய ஜனங்கள் மத்தியில் அசைவாடிக்கொண்டிருக்கிறார். அவர் பல வழிகளில் தம்மை வெளிப்படுத்துகிறார் மற்றும் தேவனுடைய ஜனங்கள் மத்தியில் கிரியைசெய்து பல்வேறு விஷயங்களைச் செய்ய அவர்களுக்கு உதவுகிறார். இந்த அத்தியாயத்தில், பரிசுத்த ஆவியானவரின் பல்வேறு செயல்பாடுகளில் ஒன்றைக் குறித்து நாம் கவனமாய் தியானிக்கப்போகிறோம். தேவ ஆவியானவருடைய கிரியையின் இந்த அம்சத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதே எங்கள் நோக்கமாகும். ஞானத்தின் ஆவியாகிய தேவனுடைய அற்புதமான ஆவியானவரைத் தேடவும் அனுபவிக்கவும் பலர் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் ஜெபமாகும்.

## தேவ ஆவியானவர்—அவருடைய பல்வேறு குணநலன்கள்

**ஏசாயா** 11:1,2

1 **ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.**

2 **ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்.**

இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின்போது அவர் மீது தங்கியிருக்கும் அபிஷேகத்தைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசி பேசினான். மேசியாவின் (அபிஷேகம் செய்யப்பட்டவர்) மீது பரிசுத்த ஆவியானவரின் அதிகாரமளிக்கும் ஏழு வெவ்வேறு அம்சங்களை அவன் முன்வைத்தான். அவன் ஏழு வெவ்வேறு “தலைப்புகளை” பயன்படுத்தினான், ஒவ்வொன்றும் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தையும், அப்படியே, அவரது குணாதிசயத்தையும் வெளிப்படுத்துகிறது.

- கர்த்தருடைய ஆவியானவர்,
- ஞானத்தின் ஆவியானவர்,
- உணர்வை அருளும் ஆவியானவர்,
- ஆலோசனையை அருளும் ஆவியானவர்,
- பெலனை அருளும் ஆவியானவர்,
- அறிவை அருளும் ஆவியானவர்,
- கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தை அருளும் ஆவியானவர்.

இது மட்டுமே அவரைக் குறித்த ஒரு முழுமையான பட்டியல் அல்ல, ஏனென்றால் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து சத்திய ஆவி, ஜீவ ஆவி, தேற்றரவாளன் என மற்ற "தலைப்புகளில்" அல்லது நாமங்களில் குறிப்பிடப்படும் வேதவசனங்களையும் நாம் பார்க்கிறோம். எவ்வாறாயினும், நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், இந்தத் தலைப்புகள் அல்லது நாமங்கள் ஒவ்வொன்றும் பரிசுத்த ஆவியானவர் யார், மற்றும் அவர் என்ன செய்கிறார் என்பதற்கான ஒரு குறிப்பிட்ட அம்சத்தை வெளிப்படுத்துகிறது. அவர் யார் என்பதையும், அவர் எதற்காகச் செய்கிறார் என்பதையும் அறிந்துகொள்வது முக்கியம். அப்போதுதான் நாம் அவருடன் ஆழமான உறவைப் பெற முடியும், மேலும் அவர் நமக்குள்ளும், நம் மூலமாகவும் அதிக அளவில் கிரியை செய்வதை நம்மால் அனுபவிக்க முடியும்.

## தேவ ஆவியானவர்—எப்போதும் கூட இருக்கிறார், எப்போதும் கிரியை செய்கிறார்

**யோவான்** 14:16

**நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.**

இங்கு விசுவாசத்தினால் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்ட ஜனங்களாகிய நமக்காகவே பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். அவர் நம்மோடு கூட இருக்கவும், நம்மில் கிரியை செய்யவும், நம் மூலமாக கிரியை செய்யவும் இங்கே இருக்கிறார். அவர் எப்போதும் நம்முடன் இருக்கிறார். அவர் இங்கே ஏதோ ஒரு மறைவான, கண்ணுக்கு தெரியாத

ஒரு வல்லமையாகவோ அல்லது பிரசன்னமாகவோ மட்டும் அல்ல, அவரைப் பற்றி நாம் பேச மட்டுமே வேண்டும், ஆனால் ஒருபோதும் அவரை அனுபவிக்க முடியாது என்பதைப் போலவும் அல்ல. அப்படி இல்லை! அவர் நமக்கு எல்லாமாக இருக்க விரும்புகிறார். அவர் தாம் ஒருவராகவே செய்யக்கூடிய காரியங்களை நம் மூலமாக செய்ய விரும்புகிறார். அவர் நம் வாழ்வில் ஒரு பங்காளராக இருக்க விரும்புகிறார்.

இந்த அத்தியாயத்தில், பரிசுத்த ஆவியானவருக்குக் கொடுக்கப்பட்ட தலைப்புகள் அல்லது நாமங்கள் ஒன்றின் மீது நாம் கவனம் செலுத்துவோம்—ஞானத்தின் ஆவியானவர். ஞானத்தின் ஆவியாக, தெய்வீக ஞானத்தை–தேவனுடைய ஞானத்தை நம் வாழ்வில் வழங்குகிறார். தேவனுடைய ஞானம் என்ன என்பதை ஓரிரு வாக்கியங்களில் வரையறுப்பது மிகவும் கடினம். அது எங்கிருந்து தொடங்குகிறது என்பதை நாம் அறிவோம் (சங்கீதம் 111:10). அதன் குணாதிசயங்களை நாம் அறிவோம் (யாக்கோபு 3:17). ஆனாலும், தேவனுடைய ஞானம் எல்லையற்றதாக இருப்பதால் (ரோமர் 11:33), அது எப்படிப்பட்டது என்பதை ஒரு சில வார்த்தைகளில் சொல்லி, போதுமானஅளவு வெளிப்படுத்துவது கடினம். ஞானம் (பொதுவாக) என்பது அறிவைப் பயன்படுத்தும் திறன் என்று சிலர் கூறியுள்ளனர். மற்றவர்கள் தெய்வீக ஞானம் என்பது தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களைப் பற்றிய நுண்ணறிவு என்று கூறியுள்ளனர். தெய்வீக ஞானம்–தேவனிடத்திலிருந்து வரும் ஞானம், அதாவது ஞானத்தின் ஆவி நம் வாழ்விற்குள் வருவது—போன்ற இவை அனைத்தையும் குறிக்கிறது.

இந்த அத்தியாயத்தில், கடந்த காலத்தில் ஜனங்களின் வாழ்க்கையில் ஞானத்தின் ஆவியானவர் எவ்வாறு செயல்பட்டார் என்பதை வேதாகமத்திலிருந்து கற்றுக்கொள்வதுதான் நமது நோக்கமாகும். அவர் மாறாதவராய் இருப்பதால், இன்றும் நம் மத்தியில் அவர் எவ்வாறு செயல்பட முடியும் என்பதை இது நமக்குக் காண்பிக்கும்! அது நம்முடைய விசுவாசத்தை வளரச் செய்து, தேவ ஆவியானவர் ஞானத்தின் ஆவியாக நம்மில் செயல்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பை நம்மில் பெருகச்செய்யும். நிச்சயமாக, அவர் கடந்த காலத்தில் செய்த கிரியையைப் போலவே இப்போதும் செய்து தன்னை மட்டுப்படுத்துவதில்லை. அவர் தேவனாய் இருக்கிறார். ஆகவே, ஞானத்தின் ஆவி பழைய வழிகளில் அல்லாமல் நிச்சயமாக புதிய வழிகளில் நமக்குள் செயல்படும்.

## பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஞானம்—யோசேப்பு

ஆதியாகமம் 41:28-40

28 பார்வோனுக்கு நான் சொல்லவேண்டிய காரியம் இதுவே. தேவன் தாம் செய்யப்போகிறதைப் பார்வோனுக்கு காண்பித்திருக்கிறார்.

29 எகிப்து தேசமெங்கும் பரிபூரணமான விளைவு உண்டாயிருக்கும் ஏழு வருஷம் வரும்.

30 அதன்பின் பஞ்சமுண்டாயிருக்கும் ஏழு வருஷம் வரும். அப்பொழுது எகிப்து தேசத்தில் அந்தப் பரிபூரணமெல்லாம் மறக்கப்பட்டுப்போம், அந்தப் பஞ்சம் தேசத்தைப் பாழாக்கும்.

31 வரப்போகிற மகா கொடுமையான பஞ்சத்தால் தேசத்தில் முன்னிருந்த பரிபூரணமெல்லாம் ஒழிந்துபோம்.

32 இந்தக் காரியம் தேவனால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், தேவன் இதைச் சீக்கிரத்தில் செய்வார் என்பதையும் குறிக்கும்பொருட்டு, இந்தச் சொப்பனம் பார்வோனுக்கு இரட்டித்தது.

33 ஆகையால் விவேகமும் ஞானமுமுள்ள ஒரு மனுஷனைத் தேடி, அவனை எகிப்துதேசத்துக்கு அதிகாரியாகப் பார்வோன் ஏற்படுத்துவாராக.

34 இப்படிப் பார்வோன் செய்து, தேசத்தின்மேல் விசாரணைக்காரரை வைத்து, பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் எகிப்து தேசத்திலே விளையும் விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை வாங்கும்படி செய்வாராக.

35 அவர்கள் வரப்போகிற நல்ல வருஷங்களில் விளையும் தானியங்களையெல்லாம் சேர்த்து, பட்டணங்களில் ஆகாரம் உண்டாயிருக்கும்படிக்கு, பார்வோனுடைய அதிகாரத்திற்குள்ளாகத் தானியங்களைப் பத்திரப்படுத்தி வைப்பார்களாக.

36 தேசம் பஞ்சத்தினால் அழிந்து போகாதபடிக்கு, அந்தத் தானியம் இனி எகிப்து தேசத்தில் உண்டாகும் பஞ்சமுள்ள ஏழு வருஷங்களுக்காக தேசத்திற்கு ஒரு வைப்பாயிருப்பதாக என்றான்.

37 இந்த வார்த்தை பார்வோனுடைய பார்வைக்கும் அவன் ஊழியக்காரர் எல்லாருடைய பார்வைக்கும் நன்றாய்க் கண்டது.

38 அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி: தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ என்றான்.

39 பின்பு, பார்வோன் யோசேப்பை நோக்கி: தேவன் இவைகள் எல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனும் இல்லை.

40 நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய். உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள். சிங்காசனத்தில்மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான்.

யோசேப்பு பார்வோனின் சொப்பனங்களை வியாக்கியானம் செய்து, ஏழு வருடங்கள் செழிப்பைத் தொடர்ந்து வரவிருந்த

கடுமையான பஞ்சத்தின் ஏழு வருடங்களையும் முன்னறிவித்த சம்பவத்தில், நம்மை மிகவும் கவர்ந்த ஒரு விஷயம் என்னவென்றால், அவர் அதைச் சொல்லிவிட்டு, அத்துடன் நிறுத்திவிடவில்லை. இன்னும் ஏழு வருடங்களில் ஒட்டுமொத்த தேசத்தையும் தாக்கப்போகும் பிரச்சனையை மட்டும் அவன் முன்னறிவிக்கவில்லை. அவன் அதற்கான ஒரு தீர்வையும் வழங்க முன்வந்தான்! வர இருந்த பிரச்சனையைத் தீர்க்க ஒரு திட்டத்தை வகுத்தான்! யோசேப்புக்கு சொப்பனங்களை வியாக்கியானம் செய்வதற்கு உதவிய அதே தேவன், அதற்கான தீர்வை வழங்குவதற்கான ஞானத்தையும் கொடுத்தார். இதிலிருந்து, நிச்சயமாகவே தேவன் யோசேப்புடன் இருந்தார் என்பது தெளிவாகிறது (ஆதியாகமம் 39:2). யோசேப்பின் வாழ்க்கையில் தேவன் வழங்கிய வரமானது அவனை "பகுத்தறிவுள்ளவனாகவும் ஞானமுள்ளவனாகவும்" மாற்றியது. இது ஞானத்தின் ஆவியின் செயல்பாட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். வரவிருக்கும் நிகழ்வுகளைப் புரிந்துகொள்வதற்கு மட்டுமல்லாமல், வரவிருக்கும் பிரச்சினைகளுக்கு சரியானதும், பயனுள்ளதுமான தீர்வுகளைக் காண அவர் நமக்கு ஞானத்தைத் தருகிறார். ஞானத்தின் ஆவியைப் பற்றி நாம் எவ்வளவு அதிகமாகக் கற்றுக்கொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாக பகுத்தறிவுடனும் விவேகத்துடனும் நாம் நடக்க முடியும்.

## திறமையான மற்றும் கலைநயம் மிக்க வேலைகளுக்கான ஞானம்—ஆசரிப்பு கூடார பணியாட்கள்

**யாத்திராகமம் 31:1-5**

**1 பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:**

**2 நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து,**

**3 விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும்,**

**4 இரத்தினங்களை முத்திரைவெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திரவேலைகளைச் செய்கிறதற்கும்,**

**5 மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவ ஆவியினால் நிரப்பினேன்.**

எகிப்திலிருந்து வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குப் பயணம் செய்த தேவனுடைய ஜனங்களுக்கு ஒரு கூடாரத்தைக்

கட்டுவதற்கான நேரம் வந்தபோது, அவர்களுக்கு வேலையாட்கள் தேவைப்பட்டனர். எனவே தேவன் பெசலயேல் என்ற மனுஷனைத் தெரிந்துகொண்டு, பரிசுத்த ஆவியால் அவனை நிரப்பினார். பெசலயேல் கூடாரத்திற்கான கலைநயமிக்க பொருட்களை வடிவமைத்து உருவாக்குகிற ஒரு தலைசிறந்த கைவினைஞனாக இருக்கும்படி, தேவ ஆவியானவர் அவனுக்கு "சாமர்த்தியம் மற்றும் அறிவை" அருளினார். எத்தனை அருமை! பரிசுத்த ஆவியானவர் ஒரு மனுஷனுக்குள் கலைத் திறனையும் சாமர்த்தியத்தையும் வழங்கினார்! ஞானத்தின் ஆவியானவரால் இன்றும் நமக்கு இதைச் செய்ய முடியும்! இப்போது, கலைத்திறன் பல வழிகளில் வெளிப்படுத்தப்படலாம் என்பதால் இது தங்கம் மற்றும் வெள்ளியைக்கொண்டு வேலைசெய்யும்போதுதான் அவசியம் என்பதில்லை நான் மீண்டும் சொல்வதென்னவென்றால், கலைத்திறனுக்கு மட்டுமல்லாமல் அனைத்து திறமைக்கும் (பொதுவான காரியங்களைச் செய்யும் திறன்) ஞானத்தின் ஆவியானவர் உதவுகிறார் நல்ல மருத்துவராக இருப்பதற்குத் திறன், ருசிகரமான உணவை சமைப்பதற்குத் திறன், ருசிகரமான உணவை சமைப்பதற்குத் திறன், கணினி நிரல்களை நன்றாக எழுதுவதற்குத் திறன், எழுதுவதற்குத் திறன், எழுதுவதற்குத் திறன், பேசுவதற்குத் திறன் போன்ற அனைத்திற்கும் திறமை தேவை. ஞானத்தின் ஆவியானவரால் நம் வாழ்வில் திறமை, சாமர்த்தியம் மற்றும் அறிவு ஆகியவற்றை வழங்க முடியும்.

பரிசுத்த ஆவியானவரின் கிரியையைப் பற்றிய தவறான எண்ணம் நமக்கு வராதபடி இந்தக் காட்சியை உட்கிரகித்துக்கொள்ளுங்கள். இதோ பெசலயேல், ஞானத்தின் ஆவியால்நிரப்பப்பட்டஒருமனுஷனாய்இருந்தான்.வனாந்தரத்தில் உஷ்ணமான வெயில் நேரத்தில் அவனது கூடாரத்தின் கீழ் அவனது சரீரத்தின் வியர்வை மற்றும் துர்நாற்றத்துடன் அமர்ந்துகொண்டு, அவனது கருவிகளைக்கொண்டு வேலை செய்வதை உங்களால் கற்பனைசெய்து "பார்க்க" முடிகிறதா? இங்கே புரிந்துகொள்ள வேண்டிய விஷயம் என்ன? பரிசுத்த ஆவியானவர் நம்மில் கிரியை செய்வதால், நாம் உழைக்க வேண்டியதில்லை என்றோ ... **அல்லது கடினமாக உழைக்க வேண்டியதில்லை என்றோ அர்த்தம் இல்லை!** தேவ ஆவியானவர் நமக்கு ஞானம், திறமை, சாமர்த்தியம் மற்றும் அறிவைக் கொடுப்பவராய் இருக்கிறார், ஆனால் நாம்தான் வியர்வை சிந்தி அந்த வேலையைச்

செய்து முடிக்க வேண்டும்! **சோம்பேறித்தனத்திற்கு இடமளிக்கக் கூடாது.**

## போதித்து அறிவுறுத்துவதற்கான ஞானம்—பெசலயேல்

யாத்திராகமம் 35:30-34

**30 பின்பு மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: பாருங்கள், கர்த்தர் யூதாவின் கோத்திரத்தில் ஊரின் மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து,**

**31 அவன் விசித்திரமான வேலைகளை யோசித்துச் செய்யவும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்யவும்,**

**32 இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கவும், மரத்தில் சித்திர வேலை செய்து சகல விநோதமான வேலைகளைச் செய்யவும்,**

**33 அவனுக்கு ஞானத்தையும் புத்தியையும் அறிவையும் அருளி, அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி தேவ ஆவியினாலே அவனை நிரப்பினார்.**

**34 அவன் இருதயத்திலும், தாண் கோத்திரத்து அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாபின் இருதயத்திலும், போதிக்கும் வரத்தையும் அருளினார்.**

தேவ ஆவியானவர் பெசலெயேலுக்கு கலைத்திறனையும் திறமையையும் அளித்ததோடு, “மற்றவர்களுக்கு நேர்த்தியாய் கற்பிக்கும் திறனையும்” அவனுக்குக் கொடுத்தது மிகவும் சுவாரஸ்யமானது. நம்மிடம் உள்ள அறிவையும் திறமையையும் பயன்படுத்திக்கொள்வது என்பது நல்ல விஷயம்தான்—பலர் தங்களுக்குத் தெரிந்ததைச் செய்வதில் திறமைசாலிகளாய் இருக்கிறார்கள்—இருப்பினும், அந்த அறிவை மற்றவர்களுக்கும் பகிர்ந்தளிப்பது மற்றும் பயிற்றுவிப்பது என்பது முற்றிலும் வேறுபட்ட திறமையாகும். பலரால் அதைச் செய்ய முடிவதில்லை. இங்கே, பரிசுத்த ஆவியானவர் பெசலெயேலுக்கும் அகோலியாபுக்கும் அந்தத் திறனை, அதாவது–கற்பித்தல், பயிற்றுவித்தல் மற்றும் அறிவுறுத்தும் திறன், மற்றும் அவர்கள் பெற்ற திறமை மற்றும் அறிவை மற்றவர்களுக்கு வழங்குவதற்கான திறன் போன்றவற்றைக் கொடுப்பதை நாம் காண்கிறோம். அந்த ஞானத்தின் ஆவியானவர்தாமே அதைச் செய்ய அவர்களுக்கு உதவினார். ஞானத்தின் ஆவியானவரால் நமக்கும் “மற்றவர்களுக்குக் கற்பிக்கும் திறனை” அளிக்க முடியும்.

## தலைமைத்துவத்திற்கான ஞானம்—யோசேப்பு, மோசே, யோசுவா, சாலொமோன்

உபாகமம் 34:9

**மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான், இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.**

2 நாளாகமம் 1:10-12

**10 இப்போதும் நான் இந்த ஜனத்திற்கு முன்பாகப் போக்கும் வரத்துமாயிருக்கத்தக்க ஞானத்தையும் அறிவையும் எனக்குத் தந்தருளும், ஏராளமாயிருக்கிற இந்த உம்முடைய ஜனத்தை நியாயம் விசாரிக்கத்தக்கவன் யார் என்றான்.**

**11 அப்பொழுது தேவன் சாலொமோனை நோக்கி: இந்த விருப்பம் உன் இருதயத்தில் இருந்தபடியாலும், நீ ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கனத்தையும், உன் பகைஞரின் பிராணனையும், நீடித்த ஆயுசையும் கேளாமல், நான் உன்னை அரசாளப்பண்ணின என் ஜனத்தை நியாயம் விசாரிக்கத்தக்க ஞானத்தையும் விவேகத்தையும் நீ கேட்டபடியினாலும்,**

**12 ஞானமும் விவேகமும் தந்திருக்கிறதுமல்லாமல், உனக்கு முன் இருந்த ராஜாக்களுக்காகிலும் உனக்குப்பின் இருக்கும் ராஜாக்களுக்காகிலும் இல்லாத ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கனத்தையும் உனக்குத் தருவேன் என்றார்.**

1 இராஜாக்கள் 3:28

**ராஜா (சாலொமோனை) தீர்த்த இந்த நியாயத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் அருளிய ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தார்கள்.**

ஞானத்தின் ஆவியினால் சிறந்த தலைவர்களாக இருந்த யோசேப்பு, மோசே மற்றும் பிற நபர்களான தேவனுடைய மனுஷர்கள் சிலரின் உதாரணங்களை நாம் காண்கிறோம். யோசுவா, மோசேயிடமிருந்து தலைமைப் பதவியைப் பெற்றதால், அவனுக்கு ஞானத்தின் ஆவி வழங்கப்பட்டது. தேவனுடைய ஜனங்களின் தலைவனாக யோசுவாவுக்கு இந்த ஞானத்தின் ஆவிதான் தேவைப்பட்டது. தம்முடைய ஜனங்களை ஆளுகை செய்யவும் ராஜ்யபாரம் பண்ணவும் ஞானம் வேண்டும் என்ற சாலொமோனின் விருப்பத்தில் தேவன் மகிழ்ச்சியடைந்தார். தெய்வீக தலைவனாக மற்றும் வெற்றிகரமான தலைவனாக இருக்க ஞானத்தின் ஆவி ஒருவனுக்கு வழிவகுக்கிறது. இதுதான் இன்றைய திருச்சபைக்குத் தேவையாய் இருக்கிறது. இதுதான் தேசங்களுக்கும், பெருநிறுவனங்களுக்கும், அமைப்புகளுக்கும் அவசியமான ஒன்றாகும். ஞானத்தின் ஆவியால் நிரப்பப்பட்ட தலைவர்கள் நமக்குத் தேவை. நீங்கள் ஒருவித தலைமைத்துவ நிலையில் இருந்தால், உங்கள் பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்ற

தேவனுடைய ஞானத்தைப் பெறும்படிக்கு அவருடைய ஆவியை வாஞ்சிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

## திறமையான வடிவமைப்பிற்கான ஞானம்—தாவீது

1 நாளாகமம் 28:11,12,19

**[11] தாவீது தன் குமாரனாகிய சாலொமோனுக்கு மண்டபமும், அதின் அறைகளும், அதின் பொக்கிஷசாலைகளும், அதின் மேல்வீடுகளும், அதின் உள்ளறைகளும், கிருபாசன ஸ்தானமும் இருக்கவேண்டிய மாதிரியையும்,**

**[12] ஆவியினால் தனக்குக் கட்டளையிடப்பட்டபடியெல்லாம் அவன் செய்யவேண்டிய கர்த்தருடைய ஆலயப்பிரகாரங்களும், தேவனுடைய ஆலயத்துப் பொக்கிஷங்களையும், பரிசுத்தமாக நேர்ந்துகொள்ளப்பட்டவைகளின் பொக்கிஷங்களையும் வைக்கும் சகல சுற்றறைகளும் இருக்கவேண்டிய மாதிரியையும்,**

**[19] இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்குத் தெரியப்படுத்த, இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றான்.**

தாவீது தேவனை ஆராதிக்க ஒரு ஆலயத்தைக் கட்ட விரும்பினான். ஆனாலும், தேவையான ஆயத்தங்களை மட்டுமே செய்யுமாறும், அவனுடைய குமாரன் சாலமோன்தான் தேவாலயத்தைக் கட்ட வேண்டும் என்றும் தேவன் அவனுக்கு அறிவுறுத்தினார். தாவீது ஆலயத்தைக் கட்டுவதற்காகக் கொண்டுவந்த பொருட்களை சாலமோனிடம் ஒப்படைக்கத் தயாராகிக்கொண்டிருந்தபோது, வேதம் சொல்வதைக் கவனிப்பது மிகவும் சுவாரஸ்யமானது. “... *தாவீது தன் குமாரனாகிய சாலொமோனுக்கு ... ஆவியினால் தனக்குக் கட்டளையிடப்பட்டபடியெல்லாம் அவன் செய்யவேண்டிய கர்த்தருடைய ஆலயப்பிரகாரங்களும் ...*” (1 நாளாகமம் 28:11) என்று தாவீது சொன்னதைக் கவனியுங்கள். “*இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்குத் தெரியப்படுத்த, இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றான்*” (1 நாளாகமம் 28:19). எத்தனை ஆச்சரியம்! தேவாலயத்தின் வடிவமைப்பு தேவனுடைய ஆவியால் தாவீதுக்கு அருளப்பட்டது. “கர்த்தருடைய கரம்” என்பது பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதலைக் குறிக்கும் ஒரு பழைய ஏற்பாட்டு சொற்றொடராகும். அதே பரிசுத்த ஆவியானவர்—அதே ஞானத்தின் ஆவியானவர் இன்றும் கிரியை நடப்பித்துக்கொண்டிருக்கிறார். இக்காலத்திலும் அவரால், தம்முடைய வடிவமைப்புகள், திட்டங்கள் மற்றும் பல விஷயங்களை இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் நம் மனதிற்குள் செலுத்த முடியும்.

## இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்கான ஞானம்—விவசாயி

ஏசாயா 28:23-29

**23 செவிகொடுத்து என் சத்தத்தைக் கேளுங்கள், நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள்.**

**24 உழுகிறவன் விதைக்கிறதற்காக நாள்தோறும் உழுகிறதுண்டோ? தன் நிலத்தைக் கொத்தி நாள்தோறும் பரம்படிக்கிறது உண்டோ?**

**25 அவன் அதை மேலாக நிரவினபின்பு, அததற்கேற்ற இடத்தில் உளுந்தைத் தெளித்து, சீரகத்தைத் தூவி, முதல்தரமான கோதுமையையும் தெரிந்துகொண்ட வாற்கோதுமையையும் கம்பையும் விதைக்கிறான் அல்லவோ?**

**26 அவனுடைய தேவன் அவனை நன்றாய்ப் போதித்து, அவனை உணர்த்துகிறார்.**

**27 உளுந்து தூலத்தாலே போரடிக்கப்படுகிறதில்லை; சீரகத்தின்மேல் வண்டிலின் உருளைச் சுற்ற விடப்படுகிறதுமில்லை; உளுந்து கோலினாலும் சீரகம் மிலாற்றினாலும் அடிக்கப்படும்.**

**28 அப்பத்துக்குத் தானியம் இடிக்கப்படும், இடைவிடாமல் அவன் அதைப் போரடிக்கிறதில்லை, அவன் தன் வண்டிலின் உருளையால் அதை நசுக்குகிறதுமில்லை, தன் குதிரைகளால் அதை நொறுக்குகிறதுமில்லை.**

**29 இதுவும் சேனைகளின் கர்த்தராலே உண்டாகிறது, அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர்.**

ஒரு விவசாயிக்கு அவனது வேலைக்கு உதவ இயந்திரங்கள் இல்லாத காலத்தில் நீங்கள் வாழ்வதை சற்று கற்பனை செய்து பாருங்கள். என்ன செய்ய வேண்டும் என்பதை அறியும் அறிவு விவசாயிக்கு எப்படிக் கிடைத்தது—அதாவது, விதை விதைக்க நிலத்தை எவ்வாறு ஆயத்தப்படுத்த வேண்டும், எப்படி தானியத்தை அறுவடை செய்ய வேண்டும், மற்றும் பல வேலைகளை எப்படி செய்ய வேண்டும் என்ற அறிவு அவனுக்கு எப்படிக் கிடைத்தது? *“ஆலோசனையில் ஆச்சரியமானவரும், செயலில் மகத்துவமானவருமாகிய”* (ஏசாயா 28:29) சர்வவல்லமையுள்ள கர்த்தர்தான் என்ன செய்ய வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள அந்த விவசாயிக்கு உதவினார் என்பதை இந்தப் பகுதி நமக்குக் கற்பிக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இயற்கை வளங்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதை விவசாயிக்குக் கற்றுக் கொடுத்தவர் தேவன் ஆவார். விவசாயத்தின் இந்த அம்சங்கள் இன்று பொதுவாக எல்லோரும் அறிந்த ஒன்றாக இருக்கலாம். இருப்பினும், மனுஷனுக்கு இன்னும் பயன்படுத்தப்படாத பல வளங்கள் கூட இருக்கலாம்—அதாவது, புதிய ஆற்றலுக்கான

ஆதாரங்கள், புதிய இரசாயனங்கள், புதிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் பல வளங்கள் கூட இருக்கலாம். ஞானத்தின் ஆவியான பரிசுத்த ஆவியானவரால் பூமியில் உள்ள வளங்களை எவ்வாறு கண்டுபிடிப்பது மற்றும் எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் புரிந்துகொள்ள தேவனுடைய ஆலோசனையையும் ஞானத்தையும் நமக்கு வழங்க முடியும்.

## கற்றலுக்கான ஞானம்—தானியேல் மற்றும் அவனது தோழர்கள்

**தானியேல்** 1:17-20

**17 இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சமார்த்தியத்தையும் கொடுத்தார். தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்.**

**18 அவர்களை ராஜாவினிடத்தில் கொண்டுவருகிறதற்குக் குறித்த நாட்கள் நிறைவேறினபோது, பிரதானிகளின் தலைவன் அவர்களை நேபுகாத்நேச்சாருக்கு முன்பாகக் கொண்டுவந்து விட்டான்.**

**19 ராஜா அவர்களோடே பேசினான். அவர்கள் எல்லாருக்குள்ளும் தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களைப்போல வேறொருவரும் காணப்படவில்லை. ஆகையால் இவர்கள் ராஜசமுகத்தில் நின்றார்கள்.**

**20 ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்.**

**தானியல்** 5:13,14

**13 அப்பொழுது தானியேல் ராஜாவின்முன் உள்ளே அழைத்துவந்து விடப்பட்டான். ராஜா தானியேலைப் பார்த்து: நீ என் பிதாவாகிய ராஜா யூதாவிலிருந்து சிறைபிடித்துவந்த யூதரில் ஒருவனாகிய தானியேல் அல்லவா?**

**14 உனக்குள்ளே தேவர்களின் ஆவி உண்டென்றும், வெளிச்சமும் புத்தியும் விசேஷித்த ஞானமும் உன்னிடத்தில் காணப்பட்டதென்றும் உன்னைக்குறித்துக் கேள்விப்பட்டேன்.**

ஞானத்தின் ஆவியானவர் நமக்கு புத்தியையும், நுண்ணறிவையும் மற்றும் கற்றுக்கொள்ளும் திறனையும் தருகிறார். தானியலுக்கும் அவனது தோழர்களுக்கும் அறிவையும், புரிந்துகொள்ளும் திறனையும், கற்றுக்கொள்ளும் திறனையும் கொடுத்தவர் தேவன்தான். இதனால் அவர்கள் அறிவில் சிறந்து விளங்கினர். அன்றைக்கு பரிசுத்த ஆவியானவர் செய்த அதே காரியத்தை இன்றைக்கும் நம்முடைய நாட்களில் அவரால் செய்ய முடியும்!

## உபதேச ஊழியத்தில் ஞானம்—இயேசு

மத்தேயு 13:54

**தாம் வளர்ந்த ஊரிலே வந்து, அவர்களுடைய ஜெபஆலயத்திலே அவர்களுக்கு உபதேசம்பண்ணினார். அவர்கள் ஆச்சரியப்பட்டு: இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது?**

இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில், கர்த்தராகிய இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின்போது அவர் மீது தங்கியிருந்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பற்றி நாம் வாசிக்கிறோம். கர்த்தராகிய இயேசு உபதேசிப்பதிலும், பிரசங்கிப்பதிலும், சொஸ்தமாக்குவதிலும் ஈடுபட்டார். இயேசுவின் உபதேச ஊழியம் ஞானம் மற்றும் அற்புதம் செய்யும் வல்லமையான செய்கைகளினால் இணங்காணப்பட்டது. ஆகவே, அது நம்முடைய நாட்களிலும் அப்படியே நடைபெற வேண்டும்! உபதேச ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் தெய்வீக ஞானத்தையும், ஆவியானவரின் அபிஷேகத்திலிருந்து வெளிப்படும் அற்புத அடையாளங்களையும் வெளிப்படுத்த விரும்ப வேண்டும்.

## ஞானத்தை போதிக்கும் வசனமாகிய வரம்

1 கொரிந்தியர் 12:7,8

[7] **ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.**

[8] **எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,**

திருச்சபையின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் செய்யும் ஊழியத்தின் ஒரு அம்சமானது ஆவியின் வரங்களின் மூலம் வெளிக்கொணரப்படுகிறது. பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட இந்த வரங்களில் ஒன்று ஞானத்தை போதிக்கும் வசனமாகும். இது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் நன்மைக்காக ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் தெய்வீக ஞானத்தை வழங்குவதாய் இருக்கிறது. ஒரு சிக்கலைத் தீர்ப்பதற்காகவும், தலைமைத்துவத்தில் முடிவெடுப்பதற்காகவும், அறிவுறை வழங்குவதற்காகவும், மற்றும் பல காரியங்களுக்காகவும் ஞானத்தை போதிக்கும் வசனம் அருளப்படலாம். தேவ ஆவியானவர் ஞானத்தை போதிக்கும் வசனத்தை அருள வேண்டிய குறிப்பிட்ட பகுதியில் (ஊழியம், வணிகம், அறிவியல், சமையல், உறவுகள் மற்றும் பல காரியங்கள்), அதை வழங்குவதற்கு

எந்தவித கட்டுப்பாடோ அல்லது தடையோ அவருக்கு இல்லை. தேவ ஆவியானவர் இன்று திருச்சபையில் ஞானத்தின் ஆவியாக செயல்படுகிறார் என்பது நமக்குத் தெரியும், மேலும் அவருடைய செயல்பாட்டை நம் வாழ்வில் நாம் கருத்தாய் வாஞ்சிக்க வேண்டும்.

## அவரை நன்றாக அறிந்துகொள்வதற்கான ஞானம்

**எபேசியர் 1:17**

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும்,**

**1 கொரிந்தியர் 1:21அ**

**... உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில் ...**

நம் தேவனை இன்னும் நெருக்கமாக அறிந்துகொள்ள ஞானம் மற்றும் வெளிப்பாட்டின் ஆவி நமக்குத் தேவை. உலக ஞானமானது நம்மை தேவனிடத்திற்கு நேராக அழைத்துச் செல்ல இயலாது. பரிசுத்த ஆவியானவர் தருகிற ஞானத்திற்கும் வெளிப்பாட்டிற்கும் நாம் தொடர்ந்து நம் இருதயங்களைத் திறக்கும்போது,அவரைப் பற்றிய நமது அறிவில் நாம் ஆழமாக வளருவோம்.

## முக்கியமான ஒன்று—ஆவியுடன் ஐக்கியங்கொள்வது

நம் அன்றாட வாழ்வில் அவருடைய நிறைவை நாம் அனுபவிக்கும்படி பரிசுத்த ஆவியானவர் நம்முடன் கூட இருக்கிறார். அவரைச்சார்ந்துகொள்ளவும், அவர் அருள்பவைகளை பெற்றுக்கொள்ளவும் நாம் கற்றுக்கொள்ளும்போது, நம் வாழ்க்கையில் அவருடைய கிரியைகளை நாம் அதிகமாக அனுபவிப்போம். நாம் என்ன செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதைப் பொறுத்து, அவர் நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் வித்தியாசமான முறையில் செயல்படுகிறார். சிலர் தலைமைத்துவ பதவிகளுக்கு அழைக்கப்படுகிறார்கள், அந்தப் பணியை நிறைவேற்ற அவர்களுக்கு ஞானத்தின் ஆவி தேவைப்படுகிறது. மற்றவர்கள் வேறு வேலையைச் செய்ய அழைக்கப்பட்டிருக்கலாம். உங்கள் தொழில் / பங்கு / அழைப்பைப் பொறுத்து, வெவ்வேறு விதங்களில் உங்களை மேம்படுத்திக்கொள்ள உங்களுக்கு ஞானத்தின் ஆவி தேவைப்படும். ஆனால் ஒவ்வொருவரும் தேவனுடைய ஆவியையும் அவர் அளிக்கும் ஞானத்தையும் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் அவருடன் தொடர்ந்து

ஐக்கியத்தில் வாழ வேண்டும்—அவரிடம் பேச வேண்டும், நமக்குத் தேவையான ஞானத்தை அவரிடம் கேட்க வேண்டும், மற்றும் அவருடைய வழிநடத்துதலுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும். அவருடைய ஏவுதலைப் பின்பற்ற நாம் பயப்படக்கூடாது. இதுவே காலப்போக்கில் உறுதியாகக் கட்டமைக்கப்பட்ட உறவாக இருக்கும். நீங்கள் அவரை எவ்வளவு அதிகமாக அறிகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக அவரை அனுபவிப்பீர்கள். பரிசுத்த ஆவியானவர் உங்கள் வாழ்க்கையில் ஞானத்தின் ஆவியாக இருப்பதைக் கண்டறியுங்கள்!

# 2

# வெளிப்பாட்டின் ஆவி

## இரகசியங்களை வெளிப்படுத்தும் தேவன் பரலோகத்தில் இருக்கிறார்

தானியல் 2:19-23,27,28

19 பின்பு இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது. அப்பொழுது தானியேல் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்திரித்தான்.

20 பின்பு தானியேல் சொன்னது: தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரமுண்டாவதாக. ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியது.

21 அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர். ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர். ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர்.

22 அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர். இருளில் இருக்கிறதை அவர் அறிவார். வெளிச்சம் அவரிடத்தில் தங்கும்.

23 என் பிதாக்களின் தேவனே, நீர் எனக்கு ஞானமும் வல்லமையும் கொடுத்து, நாங்கள் உம்மிடத்தில் வேண்டிக்கொண்டதை இப்பொழுது எனக்கு அறிவித்து, ராஜாவின் காரியத்தை எங்களுக்குத் தெரிவித்தபடியினால், உம்மைத் துதித்துப் புகழுகிறேன்.

27 தானியேல் ராஜசமுகத்தில் பிரதியுத்தரமாக: ராஜா கேட்கிற மறைபொருளை ராஜாவுக்குத் தெரிவிக்க ஞானிகளாலும், ஜோசியராலும், சாஸ்திரிகளாலும், குறிசொல்லுகிறவர்களாலும் கூடாது.

28 மறைபொருள்களை வெளிப்படுத்துகிற பரலோகத்திலிருக்கிற தேவன் கடைசிநாட்களில் சம்பவிப்பதை ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்குத் தெரிவித்திருக்கிறார். உம்முடைய சொப்பனமும் உமது படுக்கையின்மேல் உம்முடைய தலையில் உண்டான தரிசனங்களும் என்னவென்றால்:

நேபுகாத்நேச்சார் ராஜா தனது ராஜ்யத்தில் உள்ள சாஸ்திரிகளையும் ஜோசியரையும் அழைத்து தான் கண்ட கனவைக் கண்டுபிடித்து அதற்கு விளக்கமும் அளிக்க வேண்டும் என்று கேட்டபோது, அவர்கள் குழப்பமடைந்தனர். யாரோ ஒருவர் கண்ட

கனவை எப்படி இன்னொரு நபரால் கண்டுபிடிக்க முடியும்! ஆனால் தானியேல் ஒரு இளைஞனாக இருந்தபோதிலும், தன்னுடைய தேவனைப் பற்றி ஓரளவு அறிந்துவைத்திருந்தான். வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவனாகிய பரலோகத்தில் வாசம் செய்யும் தேவனானவர், *"ஆழமானதும் மறைபொருளுமான விஷயங்களை வெளிப்படுத்துகிறார்"* என்பதை தானியல் அறிந்திருந்தான். *"இருளில் இருப்பவைகளை"* தேவன் அறிவார்—அதாவது, மனுஷனுக்குத் தெரியாத விஷயங்கள் தேவனுக்குத் தெரியும். இருளை வெளிச்சமாக்கி மறைவில் உள்ளதை வெளிக்கொணரும் ஒளி அவரிடமே உண்டு. தமது ஜனங்கள் ஆழத்தில் உள்ளவைகளையும் மறைவான விஷயங்களையும் காணும்படி, அவ்வப்போது, தேவன் அவர்களுக்கு இந்த ஒளியை வழங்குகிறார். எனவே, தானியேல் தன் தோழர்களுடன் சேர்ந்து ஜெபம் செய்தான். தேவன் அவர்களுடைய ஜெபத்திற்குப் பதிலளித்து, தானியேல் தெரிந்துகொள்ள வேண்டியதை அவனுக்கு வெளிப்படுத்தினார்.

தேவன் இரகசியங்களை வெளிப்படுத்துபவராய் இருக்கிறார். ஒரு இரகசியம் அல்லது மறைபொருள் என்பது அந்தநேரத்தில் யாரும் அறிந்திராத ஒரு தகவலாகும். தேவனால் உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்த முடியும். கடந்த கால, நிகழ்கால அல்லது எதிர்காலத்தில் உள்ள விஷயங்களைப் பற்றிய தகவலை அவரால் உங்களுக்கு வெளிப்படுத்த முடியும். தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தும் தகவல்கள் உங்கள் வாழ்க்கையில் வழிகாட்டுதலையும் ஆலோசனையையும் கொண்டுவரும். அது உங்களைத் தனிப்பட்ட முறையிலோ அல்லது வேறு யாராவது ஒருவர் மீதோ தாக்கத்தை ஏற்படுத்தும் தகவலாக இருக்கலாம். உதாரணமாக, தானியலின் சம்பவத்தைப் போலவே, தேவன் எதிர்காலத்தில் என்ன செய்யப்போகிறார் என்பதைப் பற்றிய தகவலாக அது இருக்கலாம். இயேசு சமாரியாவில் உள்ள கிணற்றின் அருகே இருந்த பெண்ணிடம் பேசியபோது, அவர் செய்ததைப் போலவே (யோவான் 4), அது சரிபடுத்திக்கொள்ளுதலுக்காகவும் மற்றும் மனந்திரும்புதலைக் கொண்டுவருவதற்காகவும், ஒருவரின் வாழ்க்கையில் உள்ள இரகசிய பாவங்களை வெளிப்படுத்துவதாக அது இருக்கலாம். இது ஒருவர் உண்மையிலேயே எப்படிப்பட்ட நபர்—என்று அவரைக் குறித்து வெளிப்படுத்தப்படும் குணாதிசயத்தின்

வெளிப்பாடாக இருக்கலாம். இதற்கு ஒரு உதாரணத்தை இங்கே காணலாம், *“இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக்குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார். அதற்கு நாத்தான்வேல்: நீர் என்னை எப்படி அறிவீர் என்றான்?”* (யோவான் 1:47,48). தேவனால் மற்றவர்களின் எண்ணங்களையும் நோக்கங்களையும் வெளிப்படுத்த முடியும். உதாரணமாக, *“அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தம்முடைய ஆவியில் அறிந்து ...”* (மாற்கு 2:8) என்று எழுதியிருக்கிறதை நாம் வாசிக்கிறோம். உங்களைப் பாதுகாத்துக்கொள்ளும்படிக்கு, நீங்கள் சந்திக்க வேண்டிய நபர்களின் திட்டங்களையும் சூழ்ச்சிகளையும் தேவனால் வெளிப்படுத்தக் கூடும். உதாரணமாக, எலிசா தீர்க்கதரிசி ஆராம் மன்னனின் யுத்த திட்டங்களைப் பற்றி இஸ்ரவேலின் ராஜாவுக்குச் சொல்லி அவனை எச்சரித்துக்கொண்டே இருந்தான், இதனால் அவன் பிரச்சனையிலிருந்து விலகி இருக்க எலிசா உதவினான். *“இந்தக் காரியத்தினிமித்தம் சீரிய ராஜாவின் இருதயம் குழம்பி, அவன் தன் ஊழியக்காரரை அழைத்து: நம்முடையவர்களில் இஸ்ரவேலின் ராஜாவுக்கு உளவாயிருக்கிறவன் யார் என்று நீங்கள் எனக்கு அறிவிக்கமாட்டீர்களா என்று கேட்டான். அப்பொழுது அவன் ஊழியக்காரரில் ஒருவன்: அப்படியில்லை, என் ஆண்டவனாகிய ராஜாவே, நீர்; உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகளையும் இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான் என்றான்”* (2 இராஜாக்கள் 6:11,12). இயற்கை மண்டலத்தில் உள்ள விஷயங்களையும் காணப்படாத ஆவி மண்டலத்தில் உள்ள விஷயங்களையும் தேவனால் நமக்கு வெளிப்படுத்த முடியும்.

இந்தப் புத்தகம் நம் வாழ்வில் வெளிப்பாட்டைக் கொண்டுவருவதில் பரிசுத்த ஆவியானவரின் கிரியையை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. வெளிப்பாட்டின் அவசியத்தையும், வெளிப்பாட்டின் ஆவியான பரிசுத்த ஆவியானவரின் கிரியையின் பல்வேறு அம்சங்களையும் குறித்து நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு வெளிப்பாட்டின் ஆவியாக இருந்து, உங்கள் வாழ்வில் தெய்வீக வெளிப்பாட்டைக் கொண்டுவருவதை நீங்கள் அனுபவிக்க வேண்டும் என்பதே எங்கள் விருப்பமாகும்.

## ஆவியானவர் வரும்போது நடப்பவைகள்

**யோவான்** 16:13-15

[13] **சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.**

[14] **அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.**

[15] **பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள், அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.**

பரிசுத்த ஆவியானவர் வெளிப்பாட்டின் ஆவியானவராய் இருக்கிறார். அவர் சத்தியத்தை நம் இருதயத்திற்கு வெளிப்படுத்துகிறார். அவர் நம்மிடம் பேசி பிதாவின் இருதயத்தை வெளிப்படுத்துகிறார். கர்த்தராகிய இயேசு தெரிவிக்க விரும்புவதை பரிசுத்த ஆவியானவர் நமக்கு சொல்லுகிறார். *"இனி வரவிருக்கும்"* காரியங்களைக் கூட அவர் நமக்குச் சொல்கிறார். இவை அனைத்தும் திருச்சபைக்கு பரிசுத்த ஆவியானவர் செய்யும் தற்போதைய ஊழியத்தின் ஒரு பகுதியாகும். விசுவாசிகளாக, தேவ ஆவியானவர் நம் வாழ்வில் கொண்டுவரக்கூடிய வெளிப்பாட்டை நாம் வாஞ்சிக்கிறவர்களாய் இருக்க வேண்டும். நீங்கள் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட பிரச்சனைகளைக் குறித்து– அதாவது, உங்கள் தொழில், உங்கள் திருமணம், வேறு இடத்திற்கு இடம் மாறிச் செல்லுதல் மற்றும் பல காரியங்களைக் குறித்து பிதா தம்முடைய இருதயத்தில் உள்ளவற்றை உங்களுக்கு வெளிப்படுத்துமாறு பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள். உங்களுடன் பேசவும், உங்களது எதிர்கால காரியங்களுக்காகவும், பிதா உங்களுக்காக ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிற விஷயங்களுக்காகவும் அவர் உங்களை ஆயத்தப்படுத்தும்படி பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள். வெளிப்பாட்டின் ஆவியாகிய பரிசுத்த ஆவியானவரிடத்தில் உங்கள் வாழ்வை வெளிப்படையாக வையுங்கள்.

## வெளிப்பாட்டிற்கான தேவை

விசுவாசிகளின் வாழ்க்கையில் தெய்வீக வெளிப்பாடு எந்த இடத்தைக் கொண்டுள்ளது? நம் ஐந்து புலன்களின் மூலமாகவோ அல்லது நம் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டவற்றின் மூலமாகவோ நாம் அடையாளம் காண முடியாத அளவிற்கு மேலானதும் நம்

அறிவுக்கு அப்பாற்பட்டதுமான ஒரு வெளிப்பாடு ஏன் நமக்குத் தேவை?

## *பிதாவை அறிதல்*

மத்தேயு 11:27

**சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது, பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான், குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்.**

எபேசியர் 1:17

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும்,**

கர்த்தராகிய இயேசு யாருக்கு பிதாவை வெளிப்படுத்துகிறாரோ அவர்களைத் தவிர வேறு யாராலும் பிதாவை அறிய முடியாது. பிதாவுடனான நெருங்கிய உறவு என்பது விடாமுயற்சியுடன் கூடிய அறிவியல் ஆராய்ச்சியின் விளைவு அல்ல. இது மிகுந்த அறிவைப் பயன்படுத்தி செய்த ஆய்வின் முடிவும் அல்ல. இது மத செயல்பாடுகளில் உள்ள ஈடுபாட்டின் விளைவும் அல்ல. கர்த்தராகிய இயேசு தம்முடைய ஆவியின் மூலமாக பிதாவை நமக்கு வெளிப்படுத்துவதால், நாம் அவரை அறிகிறோம். தேவனைப் பற்றிய அறிவு நமக்கு இருக்கலாம், இந்த அறிவு துல்லியமாக இருக்கலாம். ஆனால் இது மிகவும் நெருக்கமாக அவரை அறிவதற்கு சமம் அல்ல. கல்வியின் மூலம் தேவனைப் பற்றிய அறிவைப் பெறலாம். ஆனால் **அவரையே அறிவது என்பது வெளிப்பாட்டின் மூலமாகத்தான் வருகிறது.**

## *குமாரனை அறிதல்*

மத்தேயு 16:15-17

**15 அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்.**

**16 சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.**

**17 இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.**

**யோவான் 14:21**

**என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான், நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்.**

நாம் கர்த்தராகிய இயேசுவை வெளிப்படுத்தலின் மூலம் அறிகிறோம். அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின்போது பெரும்பாலான மதத்தை சார்ந்தவர்கள் இருந்ததைப் போலவே, நமது நாட்களில் வாழும் படித்தவர்கள் பலரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையைப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவைப் பரியாசம் செய்கிறார்கள் மற்றும் பூமிக்குரிய ஞானத்தை கற்றதில் பெருமை கொள்கிறார்கள். அவர்கள் எவ்வளவு முட்டாள்களாய் இருக்கிறார்கள் என்பதையோ அல்லது அவர்களின் அறியாமையின் அளவு எவ்வளவு அதிகம் என்பதையோ அவர்கள் உணர்வதில்லை. அவர்களுடைய இருதயங்கள் கடினப்பட்டிருப்பதால், தேவ ஆவியானவர் அவர்களிடம் கொண்டுவர விரும்பும் வெளிப்பாட்டை அவர்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகையால், அவர்களுடைய அறியாமையே அவர்களை தேவனுடைய ஜீவனிலிருந்து துண்டித்துவிட்டது (எபேசியர் 4:18). சிறு குழந்தைகளைப் போல நம் இருதயங்களைத் தாழ்த்தும்போதுதான் நாம் தேவனுடைய ஆவியிலிருந்து கிடைக்கும் வெளிப்பாட்டைப் பெற முடியும்.

இயேசு கிறிஸ்துவின் தனிப்பட்ட வெளிப்பாட்டில் நாம் படிப்படியாக வளர, நாம் அவரிடத்தில் அன்புடனும் கீழ்ப்படிதலுடனும் நடந்துகொள்ள வேண்டும். அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துவதாக இயேசு சொல்லியிருக்கிறார். அவர் தம்மை நமக்கு வெளிப்படுத்தியதை விடவும் அதிகமாக நாம் அவரை மற்றவர்களுக்கு வெளிப்படுத்திவிட முடியாது. நாம் தனிப்பட்ட முறையில் அவரை எந்த அளவிற்கு அறிந்துகொள்ளுகிறோமோ, அந்த அளவிற்கு மட்டுமே நம்மால் அவரை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்த முடியும்.

## *தேவனுடைய கிரியைகளைப் புரிந்துகொள்ளுதல்*

**மத்தேயு 11:20,25,26**

**[20] அப்பொழுது, தமது பலத்த செய்கைகளில், அதிகமானவைகளைச் செய்யக் கண்ட பட்டணங்கள் மனந்திரும்பாமற் போனபடியினால் அவைகளை அவர் கடிந்துகொள்ளத் தொடங்கினார்:**

**[25] அந்தச் சமயத்திலே இயேசு சொன்னது: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.**

**[26] ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது.**

**அப்போஸ்தலர் 4:13,14**

**[13] பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்று அறிந்து கொண்டார்கள்.**

**[14] சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் அவர்கள் அருகே நிற்கிறதைக் கண்டபடியால், எதிர்பேச அவர்களுக்கு இடமில்லாதிருந்தது.**

இயேசு தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின்போது செய்த அற்புதங்களை “ஞானமுள்ளவர்களாலும் கற்றறிந்தவர்களாலும்” புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள், “ஒருவேளை அது ஏமாற்று வேளையாக இருக்கலாம்; ஒருவேளை அது பிசாசுகளின் கிரியையாக இருக்கலாம். அது தேவனுடைய கிரியையாய் இல்லாமல், வேறு எதாவது ஒன்றாக இருக்கலாம்” என்று சொல்லி தேவனுடையவல்லமையானசெயல்களைசந்தேகப்படமுயன்றனர். இருப்பினும், பள்ளிக்குச் சென்று கல்வி கற்காதவர்களும் சாதாரண மனுஷர்களுமான பேதுரு மற்றும் யோவான் போன்றவர்கள், மற்றும் “சிறு குழந்தைகள்” போன்றவர்கள் இயேசுவைப் பின்பற்றி, அவர் செய்த அற்புதங்களைப் புரிந்துகொண்டனர். இவை தேவனுடைய உண்மையான கிரியைகள் என்பது அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. இயேசுவின் நாமத்தினாலும் சாதாரண விசுவாசத்தினாலும் கிறிஸ்து செய்த கிரியைகளைத் தாங்களும் செய்ய முடியும் என்ற வெளிப்பாட்டை அவர்கள் பெற்றனர். உண்மையில், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மற்றும் பரலோகத்திற்கு ஏறிச்செல்லுதல் நடந்தேறிய பிறகும்கூட, இந்த மனுஷர்கள் தொடர்ந்து குணப்படுத்துதல் மற்றும் தேவனுடைய அற்புதம்–செய்யும்—வல்லமையை வெளிப்படுத்திக்காட்டினர். இன்றைய நாட்களில், “ஞானமுள்ளவர்கள் மற்றும் கற்றுத்தேறினவர்கள்”

ஆகியோரான கிறிஸ்தவ இறையியலாளர்கள், பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களில் பலரால் தேவனுடைய செயல்களைப் புரிந்துகொள்ள முடிவதில்லை என்பது மிகவும் வருத்தமளிப்பதாக இருக்கிறது. நம் நாட்களில் நடைபெறும் அற்புதங்களையும் அடையாளங்களையும் மறுப்பதற்காக பலர் அதிக நேரத்தையும் முயற்சியையும் செலவிடுகிறார்கள். ஆனாலும், “பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்றிராத சாதாரணமான” ஆண்களும் பெண்களும் தங்கள் ஊழியத்தில் தேவனுடைய வல்லமையான செயல்களை அனுபவித்து வருகின்றனர். தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட சந்திப்புகளை வரவேற்க வெளிப்பாடு தேவைப்படுகிறது.

### *ராஜ்யத்தின் இரகசியங்களைப் புரிந்துகொள்ளுதல்*

மத்தேயு 13:10-16

**[13] அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்துகொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன்.**

**[14] ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது, அதாவது: காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள், கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள்.**

**[15] இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது, காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே.**

**[16] உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்.**

வெளிப்படுத்துதல் மனந்திரும்புதலுக்கு வழிவகுக்கிறது. மனந்திரும்புதல் இரட்சிப்பை அளிக்கிறது (ஒரு நபரை முழுமையாக குணப்படுத்துதல்). ஆவிக்குரியவைகளைப் பார்க்கும்படி நமது ஆவிக்குரிய கண்களும், கேட்கும்படி நமது ஆவிக்குரிய செவிகளும், மற்றும் ஆவிக்குரிய சத்தியங்களைப் புரிந்துகொள்ளும்படி நமது ஆவிக்குரிய இருதயங்களும் திறக்கப்படுதலே வெளிப்படுத்தல் ஆகும். இது சத்தியத்தைப் பற்றிக்கொள்வதற்கான நமது தேவையை அங்கீகரிக்க வழிவகுக்கிறது. நாம் நமது புத்தியீனத்தை விட்டுவிட்டு, தேவனிடத்திற்குத் திரும்பி, சத்தியத்தைப் பற்றிக்கொண்டால், அதுதான் மனந்திரும்புதல் என்னப்படுகிறது. அப்போதுதான் (மனுஷர்களின் கண்களைத் திறப்பதற்கும் பின்னர் அவர்களை

மனந்திரும்புதலுக்கு நேராக வழிநடத்துவதற்கும் தேவன் முதலில் வல்லமையான கிரியை செய்யும் நேரங்கள் இருந்தாலும் கூட) தேவன் குணமாக்குகிறார்.

தேவ ஆவியானவர் கொண்டுவரும் வெளிப்பாட்டின் மூலம்தான் நாம் தேவனுடைய ராஜ்யத்தின் ரகசியங்களைப் புரிந்துகொள்கிறோம். பரிசுத்த ஆவியானவர் தம்முடைய ஒளியை நம் இருதயங்களிலும் மனங்களிலும் செலுத்தும்போது, நாம் ஆவிக்குரிய கொள்கைகளைப் புரிந்துகொண்டு தேவனுடைய வழிகளைப் புரிந்துகொள்ளத் தொடங்குகிறோம். தேவனுடைய ஜனங்களாக, இன்று நமக்குத் தேவைப்படுவது கல்வி மட்டுமல்ல, வெளிப்பாடும் நமக்குத் தேவையாய் இருக்கிறது. ஆவிக்குரிய விஷயங்களைக் குறித்து அறிய நமக்கு கல்வி தேவைதான், ஆனால் அதைவிட முக்கியமாக, கிறிஸ்துவின் சரீரத்திற்குக் கிடைக்கப்பெறும் அறிவைப் புரிந்துகொள்ள நமக்கு வெளிப்பாடு தேவையாய் இருக்கிறது.

## வேத வாக்கியங்களின் வெளிப்பாடு

உபாகமம் 29:29

**மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள், வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்**

1 பேதுரு 1:10-12

**10 உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்.**

**11 தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்.**

**12 தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது. பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது. இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்.**

எபேசியர் 3:4-6

[4] இதைக்குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன்.

[5] அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக்குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்துகொள்ளலாம்;

[6] இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை.

சங்கீதங்கள் 119:18

உம்திருச்சட்டத்தில் வியப்பானவற்றை நான் கண்டுணருமாறு என் கண்களைத் திறந்தருளும்.

வேத வாக்கியங்கள்—அதாவது தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையானது—கண்ணுக்குத் தெரியாத உண்மைகளின் வெளிப்பாடாகும். அவை வெளிப்பாட்டின் மூலம் கொடுக்கப்பட்டன. இன்று அவை வெளிப்பாட்டின் மூலம் புரிந்துகொள்ளப்படுகின்றன. தேவனுடைய வார்த்தையை சுமந்துவந்த தீர்க்கதரிசிகள் அதை வெளிப்பாட்டின் மூலம் பெற்றனர். தேவ ஆவியானவர் அவர்களுக்குள் கிரியைசெய்து, தேவனுடைய ரகசியமான விஷயங்களைப் பற்றிய வெளிப்பாட்டையும் நுண்ணறிவையும் அவர்களுக்குக் கொடுத்தார். இவை நமது நன்மைக்காகவே பதிவு செய்யப்பட்டுள்ளன. இன்று, எழுதப்பட்ட வேதாகமத்தை நாம் பார்க்கும்போது, நம் கண்கள் திறக்கப்பட்டிருக்க வேண்டும். வேதத்தை எழுதும்படி ஏவின அதே ஆவியானவர்தான், வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அற்புதமான விஷயங்களைக் காண நம் கண்களைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும்.

## ஆவியினாலே நமக்கு வெளிப்படுத்தப்பட்டது

1 கொரிந்தியர் 2:9-12

[9] எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.

[10] நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.

[11] மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.

**[12] நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.**

மனுஷன் பார்த்திராதது, கேட்டிராதது அல்லது சிந்தனையில் தோன்றியிராததுமான விஷயங்கள் உள்ளன—அவை தேவன் தம்மை நேசிப்பவர்களுக்காக ஆயத்தம்பண்ணிவைத்திருக்கிற விஷயங்களாகும். கிறிஸ்துவின் சரீரமாய் இருக்கிற நமக்காகவே இப்படிப்பட்டவைகள் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளன. தேவன் தம்முடைய ஆவியினாலே இவற்றை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார், மேலும் அவை எழுதப்பட்ட வேதாகமத்தில் நமக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. வெளிப்பாட்டின் ஆவியானவர் கிறிஸ்துவின் சரீரத்தில் தொடர்ந்து செய்த கிரியையின்மூலம், வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டவை தற்போது புரிந்துகொள்ளப்படும் வகையில் ஒரு வெளிப்பாடாக மாறுகிறது. கிறிஸ்துவின் சரீரமானது ஒரு பயணிக்கும் காலகட்டத்தில் உள்ளது, தேவன் நமக்கு இலவசமாகக் கொடுத்த விஷயங்களை சரீரமாகிய சபை படிப்படியாகப் புரிந்துகொள்கிறது. தனிநபர்களாகிய நமது தனிப்பட்ட வாழ்க்கையிலும், உலகெங்கிலும் உள்ள உள்ளூர் திருச்சபைகளிலும் ஐக்கியத்தில் கூடிவருபவர்கள் வாழ்க்கையிலும் இது உண்மை. தேவன் நமக்காகத் திட்டமிட்டுள்ள விஷயங்களை அவர் தம்முடைய ஆவியினாலே நமக்கு வெளிப்படுத்துகிறார். அவர் நமக்காக ஆயத்தம்பண்ணியிருக்கிறவைகளை நாம் பெற்றுக்கொள்ளும்படிக்கு, இவைகளை வாஞ்சிக்கவும் பெற்றுக்கொள்ளும்படி முயற்சிக்கவும், இந்தக் காரியங்களைக் குறித்த வெளிப்பாட்டை நாம் பெற வேண்டும்.

## வெளிப்பாட்டின் ஆவியும் வெளிப்பாட்டின் வரங்களும்

1 கொரிந்தியர் 12:7,8,10

**[7] ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.**

**[8] எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,**

**[10] வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.**

விசுவாசிகளின் வாழ்க்கையில் தேவ ஆவியானவரின் பிரசன்னமும் கிரியையும் வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்தப்படுகிறது. பொதுவாகவே, ஆவியானவரின் பிரசன்னம் மற்றும் செயல்பாடு போன்றவற்றின் வெளிப்பாடு அல்லது அவற்றை அறிவித்தலே ஆவியின் ஒன்பது வரங்கள் என்று அறியப்படுகிறது. இந்த வரங்களில் பல, அந்நேரத்தில், தேவன் பயன்படுத்தும் பாத்திரமாக இருக்கும் நபருக்கு தேவனுடைய ஆவியிலிருந்து வெளிப்படுத்தப்படும் வெளிப்பாட்டை உள்ளடக்கியதாய் இருக்கிறது. ஞானத்தை போதிக்கும் வசனத்தை, அறிவை உணர்த்தும் வசனத்தை, ஒரு தீர்க்கதரிசன வார்த்தையை வெளியிடும் ஒரு நபருக்கு அல்லது ஆவிக்குரிய மண்டலத்தில் உள்ளவைகளைப் பற்றிய நுண்ணறிவை வெளிப்படுத்தும் ஒரு மனித பாண்டத்திற்கு ஒரு காரியம் வெளிப்படுத்தப்படுகிறது.

## வெளிப்பாட்டின் ஆவியும் அந்நிய பாஷைகளில் ஜெபித்தலும்

1 **கொரிந்தியர்** 14:2

**ஏனெனில் அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.**

அந்நியபாஷைகளில் ஜெபிக்கும்போது, நாம் ரகசியங்களைப் பேசுகிறோம். நம் மனதுக்குத் தெரியாத விஷயங்களை நாம் பேசுகிறோம். நாம் அந்நிய பாஷைகளில் ஜெபிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் வெளிப்பாட்டின் ஆவியாகவும், விண்ணப்பத்தின் ஆவியாகவும் செயல்பட, மேலும் பல காரியங்களை நம் மூலம் செய்ய நாம் அவரை அனுமதிக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் நம் ஆவியிலிருந்து இரகசியங்களை வெளிப்படுத்துவதால், நாம் அறிந்திராத மனுஷர்கள், இடங்கள் மற்றும் நிகழ்வுகளைப் பற்றி நமக்கு ஏற்கனவே தெரிந்ததைப்போல் ஜெபிக்கலாம்.

## வெளிப்பாட்டின் ஆவியும் வார்த்தையின் ஊழியமும்

1 **கொரிந்தியர்** 14:6

**மேலும், சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நியபாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன?**

ஒருவன் வார்த்தைக்கு ஊழியஞ்செய்யும்போது, அவன் வெளிப்படுத்துதலை, அறிவை, தீர்க்கதரிசனத்தை அல்லது போதனையை வழங்குகிறான். வெளிப்பாடு என்பது ஆவிக்குரிய சத்தியத்தை வெளிப்படுத்துவதாகும். தேவனுடைய வார்த்தையின் ஊழியர்களாக, நாம் வெளிப்பாட்டின் ஆவியைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நமக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தில், நாம் பேச வேண்டிய வார்த்தையை அவர் நமக்கு வெளிப்படுத்துவார். வெளிப்பாட்டின் ஆவியானவராக, சத்தியம் யாருக்கு முன்வைக்கப்படுகிறதோ, அவர்களின் கண்களை அவர் திறக்கிறார். அவர் அங்கு இல்லை என்றால், வார்த்தைக்கு ஊழியம் செய்வதில் நம்முடைய முயற்சிகள் ஆவிக்குரிய அறிவொளியை உண்டாக்காது.

## வெளிப்பாட்டின் ஆவி மற்றும் தீர்க்கதரிசன ஊழியம்

ஆமோஸ் 3:7

**கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.**

1 கொரிந்தியர் 14:29-31

29 **தீர்க்கதரிசிகள் இரண்டுபேராவது மூன்றுபேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள்.**

30 **அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், முந்திப் பேசினவன் பேசாமலிருக்கக்கடவன்.**

31 **எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும், நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ்சொல்லலாம்.**

தீர்க்கதரிசன ஊழியத்தின் மூலம் வெளிப்படுத்துதலின் ஆவியானவர் மிகவும் வல்லமையாக செயல்படுகிறார். தேவ ஆவியானவர் தீர்க்கதரிசிக்கு ஒரு காரியத்தை வெளிப்படுத்துகிறார், பின்னர் அந்தத் தீர்க்கதரிசி அதை யாருக்கு உரைக்க வேண்டுமோ, அவர்களுக்கு அதைத் தீர்க்கதரிசனமாக உரைக்கிறார்.

## வெளிப்பாட்டின் ஆவியும் நமது தனிப்பட்ட வாழ்க்கையும்

லூக்கா 2:25,26

25 **அப்பொழுது சிமியோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான், அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல்வரக் காத்திருக்கிறவனாயும் இருந்தான், அவன் மேல் பரிசுத்தஆவி இருந்தார்.**

[26] **கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது.**

பரிசுத்த ஆவியானவர் வெளிப்பாட்டின் ஆவியாக ஒவ்வொரு விசுவாசியின் வாழ்விலும் செயல்படுகிறார். தனிநபர்களாகிய நமக்கான தேவனுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் வெளிப்படுத்தும் தேவனுடைய ஆவியை விரும்புவதும், தேடுவதும், அவர் சொல்வதைக் கேட்பதும் நமது பாக்கியமாகும். ஆலோசனை, சீர்படுத்துதல், ஊக்கமளித்தல் மற்றும் வழிகாட்டுதல் போன்றவைகளுக்காக தேவ ஆவியானவர் நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் விசேஷித்த வெளிப்பாட்டை அருளுகிறார். தேவ ஆவியானவர் கொண்டுவரும் வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளும்படி, நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவனுக்கு முன்பாக வெளிப்படையாக இருக்கும்போது, பிதாவையும், அவருடைய குமாரனையும் பற்றிய நமது அறிவிலும், அவருடைய வார்த்தையைப் பற்றிய நமது புரிதலிலும் மிகுதியாய் வளருவோம்.

# 3

# வல்லமையின் ஆவி

நாங்கள் வழக்கமாகப் பாடும் பழைய ஆங்கில பாடல் ஒன்று உண்டு.

“ஆவியானவர் அசைவாடிக்கொண்டிருக்கிறார்,
உலகம் முழுவதும்,
தீர்க்கதரிசிகள் கூறியது போலவே,
நீர் கடலை மூடியிருப்பதைப் போல,
உலகம் முழுவதும்,
கர்த்தரின் மகிமை வெளிப்படும்படியான,
ஒரு வல்லமையான வெளிப்பாடு வெளிப்படப்போகிறது ...”

இது எத்தனை உண்மை! சமீப காலங்களில், தேவ ஆவியானவரின் அசைவாடுதல் தொடர்ந்து அதிகரித்து வருவதை உலகெங்கிலும் உள்ள திருச்சபைகள் சாட்சி பகர்ந்து வருகின்றன. பிரதான பிரிவுகளில் உள்ள திருச்சபைகள் கூட தேவ ஆவியானவரின் பலமான அசைவாடுதலுக்கு உள்ளாகியுள்ளன. பரிசுத்த ஆவியானவரின் இன்றைய அசைவாடுதலின் சிறப்பியல்புகளில் ஒன்று, அவரது வல்லமையினால் செய்யப்படும் பலமான செய்கைகளை குணப்படுத்துதல்கள், அற்புதங்கள் மற்றும் பிசாசுகளின் கிரியையை தகர்த்தெறிதல் போன்ற செயல்களின் வாயிலாக காண வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்திருப்பதேயாகும்.

இந்த அத்தியாயத்தில், பரிசுத்த ஆவியானவருடைய கிரியையின் இந்த அம்சத்தை நாம் ஆய்வு செய்யலாம். இது பரிசுத்த ஆவியானவரை வல்லமையின் ஆவியாக உங்களுக்கு அறிமுகப்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம். அவருடைய வல்லமையினால் செய்யப்படும் பலமான செய்கைகளின் மூலமாக அவருடைய பிரசன்னத்தின் வெளிப்பாடுகளை அதிக தாகத்தோடு வாஞ்சிப்பதற்கு இந்த ஆய்வு உங்களை ஊக்குவிக்கட்டும்.

## தேவனுடைய ஆவி—வல்லமையின் ஆவி

**ஏசாயா** 11:1,2

**1 ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.**

**2 ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்.**

ஏசாயா 11:1,2 இல் சொல்லப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானவருடைய கிரியையின் பல்வேறு அம்சங்களில் “வல்லமையின் ஆவி” என்ற ஒன்றும் உள்ளது. இது பரிசுத்த ஆவியானவரை பலம், வல்லமை, வலிமை மற்றும் பெலன் நிறைந்தவராக வெளிப்படுத்துகிறது. மகத்தான காரியங்களைச் செய்யக்கூடியவராக தேவனுடைய ஆவியை அது வெளிப்படுத்துகிறது. அவர் வல்லமையின் ஆவியாய் இருக்கிறார். அவரால் கிரியை நடப்பிக்க முடியும்.

பரிசுத்த ஆவியானவர் இன்றும் வல்லமையின் ஆவியாக செயல்பட்டுக்கொண்டிருகிறார். அவர் மாறாதவராய் இருப்பதால் அவர் தமது வல்லமையை இழந்துபோய்விடவில்லை. தேவ ஆவியானவர், ஜனங்கள், இடங்கள் மற்றும் பொருட்கள் மீது தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தி பகிர்ந்தளிக்கிறார். இன்னும் சொல்ல வேண்டுமானால், ஜனங்கள் (தனிநபர்கள் மற்றும் குழுக்கள்), இடங்கள் (முழு புவியியல் பகுதிகள்–நகரங்கள், கிராமங்கள், ஒரு கூடுகை ஸ்தலம்), மற்றும் இயற்கை, பொருட்கள் (துணிகள், வானிலை மற்றும் பல) போன்றவை தேவனுடைய ஆவியின் வல்லமையால் தாக்கத்திற்கு உள்ளாகலாம், மாற்றப்படலாம், மற்றும் பாதிக்கப்படலாம். உதாரணமாக, தேவ ஆவியானவரால் ஒரு நபரின் சரீரத்தின் மீது அசைவாடி ஒரு நொடிப்பொழுதில், சகல நோய்களையும் சகல வியாதிகளையும் நீக்க முடியும், எப்படிப்பட்ட கொடூரமான வியாதிகளாக இருந்தாலும் சரி, அவரால் அதை சொஸ்தமாக்க முடியும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால், ஒரு நொடியில், கட்டிகளை அகற்றலாம், உறுப்புகளை புதிதாக உருவாக்கலாம், பழைய உறுப்புகளை புதிய உறுப்பாக மாற்றலாம், இரத்தநாளங்கள் சுத்திகரிக்கப்பட முடியும், வியாதிக்கான ஒவ்வொரு தடயமும் முற்றிலும் மறைந்துவிடக் கூடும், மற்றும் பல அதிசயங்களை அவரால் நடப்பிக்க

முடியும். தேவ ஆவியானவரால், ஒரு சிலராகவோ அல்லது பல ஆயிரக்கணக்கான ஜனங்களாகவோ கூடியிருக்கும் இடத்தில், அவர்கள் மீது அசைவாடி, அநேகரைத் தொட்டு, அவர்களின் வாழ்வில் ஒரே நேரத்தில் அற்புதங்களைச் செய்ய முடியும். பரிசுத்த ஆவியானவரால், ஒரு முழு கிராமத்திலோ அல்லது நகரத்திலோ “ஆவிக்குரிய காலநிலையில்” ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்து, ஜனங்கள் மனந்திரும்புதலை அடையும்படி செய்து, கர்த்தராகிய இயேசுவுக்கு நேராக அவர்களைத் திரும்பவைக்க முடியும், மற்றும் அற்புதங்கள் மற்றும் குணப்படுத்துதல்கள் மூலம் தமது பலத்த செய்கைகளை வெளிப்படுத்த முடியும். தேவ ஆவியானவரால் தம்முடைய வல்லமையை ஒரு சிறிய துணி அல்லது ஆடை போன்ற பொருட்களில் தங்கியிருக்கச் செய்ய முடியும். இந்தத் துணி அல்லது ஆடை, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, ஆவியானவரின் வல்லமையை சுமந்து செல்லும் ஒரு பொருளாகவோ அல்லது அதைத் தன்னிடம் வைத்துவைத்திருக்கும் ஒரு கொள்கலனாகவோ மாறும். இந்தப் பொருட்களில் உள்ள வல்லமை வெளியேறி மற்ற பொருட்களின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும்—உதாரணமாக, நோய்வாய்ப்பட்டவர்கள் அந்த துணியுடன் / ஆடையுடன் தொடர்புகொள்ளும்போது, அவர்கள் குணமடையக் கூடும். தேவ ஆவியானவர் காற்று, மேகங்கள் மற்றும் இவற்றைப் போன்ற பல இயற்கை வானிலையின் கூறுகள் மீது அசைவாடி—அவற்றை மாற்றியமைக்க முடியும்.

## சிருஷ்டிப்பில் வல்லமையின் ஆவி

**ஆதியாகமம்** 1:1-3

1 **ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.**

2 **பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின்மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.**

3 **தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று.**

**சங்கீதம்** 104:30

**நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும், நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்.**

தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக்கொண்டிருந்தபோது (அல்லது ஜலத்தை முழுவதுமாக மூடியிருந்தபோது) சர்வவல்லமையுள்ள தேவன் தம்முடைய

வார்த்தையைப் பேசினார். தேவனுடைய செயல்பாடுகளின் வரிசை முக்கியமானது. முதலாவதாக, தேவனுடைய ஆவியானவர் பரந்துவிரிந்த எல்லையைத் தம்முடைய பிரசன்னத்தினால் மூடிக்கொண்டார். பின்னர், வார்த்தையானது ஆவி மண்டலத்தில் பேசப்படுகிறது. அதன் பின்னர், விஷயங்கள் நடக்கிறது. திரியேக தேவனின் நோக்கங்களை நிறைவேற்றுபவர் தேவ ஆவியானவர் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. சொல்லப்பட்ட வார்த்தைக்கு ஏற்ப இயற்கை உலகை சிருஷ்டிப்பவரும், மாற்றுபவரும், வடிவமைப்பவரும், உருவாக்குபவரும் அவரே.

## சரீரத்தில் பெலனை அளிக்கும் வல்லமையின் ஆவி

நியாயாதிபதிகள் 14:6,19அ

6 அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், அதை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழத்துப்போடுகிறதுபோல் கிழித்துப்போட்டான். ஆனாலும் தான் செய்ததை அவன் தன் தாய் தகப்பனுக்கு அறிவிக்கவில்லை.

19அ கர்த்தருடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால், அவன் அஸ்கலோனுக்குப் போய், அவ்வூராரில் முப்பதுபேரைக் கொன்று, அவர்களுடைய வஸ்திரங்களை உரிந்துகொண்டுவந்து, விடுகதையை விடுவித்தவர்களுக்கு அந்த மாற்றுவஸ்திரங்களைக் கொடுத்து,

நியாயாதிபதிகள் 15:13ஆ-15

13அ இரண்டு புதுக்கயிறுகளாலே அவனைக் கட்டி, கன்மலையிலிருந்து கொண்டுபோனார்கள்.

14 அவன் லேகிவரைக்கும் வந்து சேர்ந்தபோது, பெலிஸ்தர் அவனுக்கு விரோதமாய் ஆரவாரம் பண்ணினார்கள். அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்போலாகி, அவன் கட்டுகள் அவன் கைகளை விட்டு அறுந்துபோயிற்று.

15 உடனே அவன் ஒரு கழுதையின் பச்சைத் தாடையெலும்பைக் கண்டு, தன் கையை நீட்டி அதை எடுத்து, அதினாலே ஆயிரம் பேரைக் கொன்றுபோட்டான்.

1 இராஜாக்கள் 18:44ஆ-46

44 ஆ ஏழாந்தரம் இவன் (எலியா): இதோ, சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனைச் சிறிய மேகம் எழும்புகிறது என்றான், அப்பொழுது அவன் நீ போய், ஆகாபை நோக்கி: மழை உம்மைத் தடைசெய்யாதபடிக்கு இரதத்தைப் பூட்டி, போய்விடும் என்று சொல் என்றான்.

45 அதற்குள்ளாக வானம் மேகங்களினாலும் காற்றினாலும் கறுத்து பெருமழை உண்டாயிற்று, ஆகாப் இரதத்தில் ஏறி யெஸ்ரயேலுக்குப் போனான்.

46 கர்த்தருடைய கை எலியாவின்மேல் இருந்ததினால், அவன் தன் அரையைக் கட்டிக்கொண்டு, யெஸ்ரயேலுக்கு வருமட்டாக ஆகாபுக்குமுன் ஓடினான்.

மேலே மேற்கோள்காட்டப்பட்ட அனைத்து வேதாகமப் பகுதிகளும் தேவ ஆவியானவர் ஜனங்கள் மீது அசைவாடி இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் சரீரத்திற்குத் தேவையான பெலனையும் திறனையும் வழங்க முடியும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. சிம்சோனின் துணிச்சலான செயலான, வெறும் கைகளால் ஒரு சிங்கத்தைக் கொன்றதும், பல மனுஷர்களை ஜெயித்ததும், தன்னைக் கட்டியிருந்த கயிறுகளை அறுந்துபோகச் செய்ததும், *"கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால்தான்"* (நியாயாதிபதிகள் 15:14) சாத்தியமாயிருந்தது. அதேபோல, இரதத்தை விட ஒரு மனுஷன் வேகமாக ஓடுகிறான் என்பதைக் கற்பனைசெய்து பாருங்கள். உண்மையில் சொல்லவேண்டுமானால், அது சாத்தியமற்றது. இருப்பினும், "கர்த்தருடைய வல்லமையினால்," கர்த்தருடைய ஆவி வல்லமையோடு வருவதைக் குறிப்பிடுவதால், எலியாவால் அவ்வாறு செய்ய முடிந்தது. பரிசுத்த ஆவியானவர் மாறிவிடவில்லை. அவர் கடந்த காலங்களில் செய்ததை, நம் நாட்களிலும் செய்ய முடியும். காலங்கள் மாறிவிட்டன என்பதால், சிங்கங்களைக் கொல்லவோ அல்லது குதிரைகளின் இரதத்தைவிட வேகமாக ஓடவோ இயற்கைக்கு அப்பாற்பட்ட பலம் தேவைப்படும் என்ற சூழ்நிலைகளுக்குள் நாம் தள்ளப்படக் கூடாது. எவ்வாறாயினும், நம் சரீரத்தில் தேவனுடைய ஆவியின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை அனுபவிக்கக்கூடிய பகுதிகள் உள்ளன. உதாரணமாக, ஒரு நாளில் நீண்ட நேரமாக நீங்கள் வேலை பார்த்துவிட்டு, பிறகு ஒருவருக்கு ஊழியம் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலையை சந்தித்தால் எப்படி இருக்கும் என்பதைக் கற்பனைசெய்து பாருங்கள். நீங்கள் சரீரப்பிரகாரமாகவும் மனதளவிலும் சோர்வாக இருக்கலாம். ஆனால் அந்த நேரத்தில், தேவ ஆவியானவரால் இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் உங்கள் சரீரத்தையும் மனதையும் பெலப்படுத்த முடியும், இதனால் தேவையில் உள்ளவர்களுக்கு ஊழியம் செய்யும் பணியை உங்களால் செய்து முடிக்க முடியும் (ரோமர் 8:11 ஐப் பார்க்கவும்).

## எதிர்ப்பை மேற்கொள்ளும் வல்லமையின் ஆவி

**சகரியா 4:6,7**

[6] **அப்பொழுது அவர்**(தேவதூதன்)**: செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**

**7 பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய். தலைக்கல்லை அவன் கொண்டுவருவான். அதற்குக் கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள் என்றார்.**

ஏசாயா 59:19
**அப்பொழுது சூரியன் அஸ்தமிக்குந்திசைதொடங்கி கர்த்தரின் நாமத்துக்கும், சூரியன் உதிக்குந்திசை தொடங்கி அவருடைய மகிமைக்கும் பயப்படுவார்கள், வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்.**

செருபாபேல் மற்றும் யோசுவாவின் தலைமையில் தாயகம் திரும்பிய யூதர்களுக்கு ஆலயத்தை மறுபடியும் புதுப்பித்துக் கட்டும் பணி இருந்தது. இருப்பினும், அவர்களது வேலையை நிறுத்துவதில் வெற்றி கண்டவர்களான, அண்டையில் இருந்த சமாரியர்களிடமிருந்து அவர்கள் அதிக எதிர்ப்பை எதிர்கொண்டனர். சுமார் 12 ஆண்டுகளுக்குப் பிறகு, சகரியா மற்றும் ஆகாய் போன்ற தீர்க்கதரிசிகளின் ஊக்கப்படுத்தும் வார்த்தைகளால், ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டும் பணியை மறுபடியும் தொடங்க ஜனங்கள் வலியுறுத்தப்பட்டனர். யூதாவின் ஆளுநராக இருந்த செருபாபேல்தான் இந்தத் திட்டத்திற்கு முதன்மையான பொறுப்பாளியாய் இருந்தான். சகரியா 4:6,7 ஆகிய வசனங்கள் தேவ ஆவியின் வல்லமையினால் தேவனுடைய வேலை நிறைவேறும் என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. எதிர்ப்பு என்ற ஒவ்வொரு மலையும் “சமபூமியாக” மாறிவிடும். ஒரு மனுஷனோ அல்லது ஸ்திரீயோ தேவனால் நியமிக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட பணியை நிறைவேற்ற ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்படும்போது, எதிரியின் எந்த எதிர்ப்பும் கிரியையும் அதை மேற்கொள்ள முடியாது. ஆவியானவரின் பலத்தால் பணியை முடிக்க முடியும்.

தேவனுடைய ஆவியால் பலப்படுத்தப்படுவது எவ்வளவு முக்கியம் என்பதை இது காட்டுகிறது. உபத்திரவத்தை எதிர்த்து நிற்பது என்பது மதத்தின் முயற்சியினால் அல்ல, மாறாக அபிஷேகத்தினால் அதை எதிர்த்து நிற்க முடியும். அபிஷேகம்பண்ணப்பட்ட சபைதான் மேலோங்கி நிற்கும்.

## உன்னதமானவரின் வல்லமை

**லூக்கா 1:30-35**

**30 தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய்.**

**31 இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.**

**32 அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார், கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்.**

**33 அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார், அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.**

**34 அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்.**

**35 தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.**

தேவனுடைய ஆவியால் மரியாளின் வயிற்றில் நிகழ்த்தப்பட்ட ஒரு படைப்பாற்றல் அதிசயத்தின் மூலம் மனுவுருவாதல் என்பது சாத்தியமாகும். இயற்கையாக கூடாத காரியம் உன்னதமானவரின் வல்லமையினால் கூடும். பரிசுத்த ஆவியானவர் மரியாளின் சரீரத்தில் இப்படிப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையைச் செய்ய முடியுமானால், என்றும் மாறாத தேவனாகிய அவரால் (மல்கியா 3:6), மனுஷனுடைய சரீரத்தை குணப்படுத்துவதும், அவன் வாழ்வில் ஆக்கப்பூர்வமான அற்புதங்களைச் செய்வதும் நம்முடைய நாட்களில் சாத்தியமற்றது என்று நாம் ஏன் நினைக்க வேண்டும்? நாம் அப்படி நினைக்கக் கூடாது! இப்போதும் கூட பரிசுத்த ஆவியானவரால், ஜனங்கள் மீது வந்திறங்கி அவர்களின் சரீரங்களைக் குணப்படுத்தும் அற்புதங்களைச் செய்ய முடியும்!

## பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணப்பட்டார்

**லூக்கா 4:14,18,19**

**14 பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். அவருடைய கீர்த்தி சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று.**

**18 கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்,**

**[19] கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு,**

**அப்போஸ்தலர்** 10:38
**நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார். தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.**

மனுவுருவாதல் நிகழ்வில், தேவனாக இருந்த வார்த்தையானது மாம்சமாகி பூமிக்கு வந்தது. இயேசு தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின்போது, சர்வ வல்லமையுடன் இருத்தல், சர்வ வியாபியாக இருத்தல் மற்றும் சர்வ ஞானியாக இருத்தல் (பிலிப்பியர் 2:6-8; யோவான் 17:5) ஆகிய தெய்வீக வல்லமைகளை ஒதுக்கி வைக்க எண்ணினார். நீங்களும் நானும் வாழ்கிறபடி வாழ்வதை அவர் தேர்ந்தெடுத்தார் (எபிரெயர் 2:14,17). அவருடைய ஊழியம் அபிஷேகத்தினால்—பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் மற்றும் வல்லமையினால் கிடைத்த பலனாக இருந்தது. அவர் செய்த அற்புதங்கள் அவருடைய வாழ்வின் மூலமாகக் கிரியை நடப்பித்த பரிசுத்த ஆவியானவரின் வல்லமையாக இருந்தது. இதைப் புரிந்துகொள்ள வேண்டியது ஏன் நமக்கு அவசியமாகிறது? ஏனென்றால், இதை நாம் புரிந்துகொள்ளும்போதுதான், யோவான் 14:12-ல் இயேசு சொன்னதை நம்மால் புரிந்துகொள்ள முடியும்- *“மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.”* “யாரேனும்” என்ற வார்த்தை உங்களையும் என்னையும் போன்றவர்களைக் குறிக்கிறது. அவர் மீதுள்ள விசுவாசத்தினால், அவர் செய்ததை நாமும் செய்வோம் என்று இயேசு கூறினார். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்போம், இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணப்படுத்துவோம், வியாதியஸ்தர்களைக் குணப்படுத்துவோம், பிசாசுகளைத் துரத்துவோம், தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்துவோம். இது எப்படி சாத்தியமாகும்? ஆவியின் வல்லமையினால்- இப்படித்தான் இயேசு அவற்றை செய்தார். இயேசு பிதாவினிடத்தில் ஏறிச் சென்றபோது, தம்மை விசுவாசிக்கிறவர்களிடத்திலும், அவர்கள் மூலமாகவும் செயல்பட ஆவியானவரை அனுப்பினார்.

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மூலமாக, இயேசு செய்த கிரியைகளை விசுவாசிகளாகிய நாமும் செய்ய முடியும்.

## சகல விசுவாசிகளுக்கும் வல்லமையின் ஆவி

அப்போஸ்தலர் 1:4,8

[4] **அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி; யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான். நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.**

[8] **பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.**

அப்போஸ்தலர் 2:38,39

[38] **பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.**

[39] **வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி,**

இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த இறுதிக் கட்டளைகளில் ஒன்று, *“என் பிதா வாக்குப்பண்ணின வரத்திற்காக”* அவர்கள் காத்திருக்க வேண்டும் என்பதாகும். மாம்சமான யாவர் மீதும் பரிசுத்த ஆவியை ஊற்றுவேன் என்று பிதா வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார் (யோவே 2:28,29). இறுதியாக, இது நிறைவேறும் நேரம் வந்திருந்தது, இயேசு தம்முடைய சீஷர்களை இதற்காக ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தார். ஆவியானவர் அவர்கள்மேல் வரும்போது, அவர்கள் வல்லமையைப் பெற்றுக்கொள்வார்கள் என்று அவர் சொல்லியிருந்தார். அது தேவனுடைய வல்லமை- அதாவது அது எந்த பூமிக்குரிய வல்லமையும் அல்ல, மாறாக, அது தெய்வீக வல்லமையாக இருந்தது. பிறகு, இறுதியில் அது அப்படியே நடந்தேறியது. “வாக்குத்தத்தம்” பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறும்படி ஊற்றப்பட்டது. அப்போஸ்தலனாகிய பேதுரு, நடந்தவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு, அவற்றை விளக்கிச் சொன்னபிறகு, அந்த “வாக்குத்தத்தம்” அவர்களுக்கும் சொந்தமானது என்பதை எடுத்துரைத்தான். “வாக்குத்தத்தம்” அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களுடைய பிள்ளைகளுக்கும், தூரத்திலுள்ளவர்களுக்கும், “நம்முடைய

தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் யாவருக்கும்" உரியது என்று அவன் கூறினான். இன்னும் சொல்லப்போனால், தேவன் ஜனங்களை தம்முடைய ராஜ்யத்திற்குள் அழைக்கும்வரை, வந்திருந்த அனைவருக்கும் "வாக்குத்தத்தம்" பொதுவானதாகும். "வாக்குத்தத்தம்"—அதாவது, அருள்மாரி பொழிந்தருளப்படுதல் எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவானது. ஒவ்வொரு விசுவாசியும் ஆவி பொழிந்தருளப்படுதலை பெற்றுக்கொள்ளவும் தேவனுடைய ஆவியின் வல்லமை அவனது அல்லது அவளது வாழ்க்கையின் மூலம் செயல்படுவதை அனுபவிக்கவும் முடியும்!

## ஆதி திருச்சபையில் வல்லமையின் ஆவியானவர்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகமானது ஆதி திருச்சபையின் மூலம் பரிசுத்த ஆவியானவர் நடப்பித்த கிரியையைப் பதிவு செய்கிறது. ஜனங்கள் குணமடைந்ததைப் பற்றி நாம் வாசிக்கிறோம்—முடவர்கள் நடக்கிறார்கள், மரித்தவர்கள் எழுப்பப்படுகிறார்கள், பிசாசுகள் துரத்தப்படுகின்றன, மற்றும் பல கிரியைகள் நடந்தன. வல்லமையாய் நடப்பிக்கப்பட்ட தேவனுடைய கிரியையானது மிகவும் பலமுள்ளதாய் இருந்தது, ஜெபித்து வழங்கப்பட்ட உறுமால்கள் மூலமும், பேதுருவின் நிழல் மட்டுமே அவர்கள் மீது விழுவதன் மூலமும் கூட ஜனங்கள் சுகமடைந்தனர். தேவ ஆவியிடம் பொய் சொன்னதற்காக ஜனங்கள் செத்து விழுந்தனர், தேவனுடைய ஊழியர்களை எதிர்த்ததற்காக ஒரு மனுஷன் குருடனாக்கப்பட்டது போன்றவற்றைப் பற்றி நாம் வாசிக்கிறோம். ஆதி திருச்சபையானது தேவனைப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருக்கிற ஒரு கோட்பாட்டு திருச்சபை அல்ல. நிச்சயம் அது ஒரு கோட்பாட்டு திருச்சபை அல்ல! ஆதி திருச்சபையினர் தங்கள் மத்தியில் தேவன் இருப்பதை அனுபவித்தனர். ஆதி திருச்சபையானது தேவனை இழந்த உலகிற்கு தேவனுடைய வல்லமையை நிரூபித்துக்காட்டியது. அவர்கள் மத்தியில் கிரியை செய்து தேவனுடைய ஆவியின் வல்லமையால் அது சாத்தியமானதாக இருந்தது. இன்றைய திருச்சபையிலும் அதே ஆவியானவரை கிரியை செய்ய அனுமதிப்பதில் எந்த வித்தியாசமும் இருக்கக் கூடாது. வல்லமையின் ஆவி நம் நடுவில் தடையின்றி அசைவாட நாம் அனுமதிக்க வேண்டும். நமது இனிமையான பிரசங்கங்களையும் நிகழ்ச்சிகளையும் வரிசையாக அணிவகுத்து நிறுத்திவைத்து, தேவ ஆவியானவர் தமது வல்லமையை வெளிப்படுத்துவதற்கு நாம் இடமளிக்காமல் இருக்க விரும்புவது எத்தனை அவமானம்.

## வார்த்தை ஊழியத்தில் வல்லமையின் ஆவி

1 கொரிந்தியர் 2:4,5

**4 உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்தில் அல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,**

**5 என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது.**

1 கொரிந்தியர் 4:20

**தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது.**

வார்த்தையின் ஊழியம் ஒரு அறிவை உபயோகப்படுத்தும் பயிற்சியாக இருக்கக்கூடாது. இது தேவனுடைய ஆவியின் வல்லமையால் செயல்படுத்தப்பட வேண்டிய ஒரு ஆவிக்குரிய கிரியையாகும். *“ஞானமுள்ள வார்த்தைகளையும் நம்பவைக்கும் வார்த்தைகளையும்”* பயன்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை, ஏனென்றால் முதிர்ச்சியடைந்தவர்களிடையே தான் ஞானத்தைப் பேசினதாக பவுல் கூறினான், இருப்பினும் அவன் இப்பிரபஞ்சத்தின் ஞானத்தை அல்ல, தேவனுடைய ஞானத்தையே பயன்படுத்தினதை அவன் தெளிவுபடுத்தினான் (1 கொரிந்தியர் 2:6,7). இருப்பினும், வார்த்தையின் ஊழியம் செய்யும் ஊழியர்கள் *“ஞானத்தையும் நம்பவைக்கும் வார்த்தைகளையும்”* சார்ந்துகொள்ளாமல், வல்லமையின் ஆவியானவருடைய செயல்பாடு மற்றும் கிரியை நடப்பித்தலை சார்ந்துகொள்ள வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 1:5 ஐயும் பார்க்கவும்). அநேக இடங்களில், திருச்சபையானது தேவனுடைய ஆவியின் வல்லமைக்கு மேலாக சுய அறிவுத்திறனை உயர்த்தி வைத்திருப்பதைப் பார்ப்பது மிகவும் வருத்தமான ஒரு விஷயமாய் இருக்கிறது. அநேக திருச்சபைகளில், அபிஷேகம் பண்ணப்படுவதைவிட அறிவுசார் நபராக இருப்பது மிகவும் நாகரீகமான ஒன்றாகக் கருதப்படுகிறது. எத்தனை அவமானம்! தேவனுடைய வார்த்தைக்கு ஊழியம் செய்யும் ஊழியர்கள் அவருடைய ஆவியின் வல்லமையை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்ற தேவனுடைய நோக்கத்திற்கு இது எவ்வளவு முரணான ஒன்றாக இருக்கிறது! தேவனுடைய வார்த்தைக்கு ஊழியம் செய்யும் ஊழியர்களாகிய நாம், *“தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது”* (1 கொரிந்தியர் 4:20) என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

## வல்லமையின் ஆவியும் அவரது வரங்களும்

1 கொரிந்தியர் 12:7-11 இல் பட்டியலிடப்பட்டுள்ள ஆவியின் ஒன்பது வரங்களில், குறைந்தபட்சம் மூன்று வரங்கள் தேவனுடைய வல்லமையின் பலமான செயல்களால் நிரூபிக்கப்படுகிறது. விசுவாச வரம், குணமாக்கும் வரம் மற்றும் அற்புதங்களைச் செய்யும் சக்தியின் வரம் ஆகியவை பரிசுத்த ஆவியானவர் வல்லமையின் ஆவியாக செயல்படுவதன் விளைவாகும். ஆவியின் இந்த கிரியை நடப்பிக்கப்பட நாம் இன்னும் அதிகமாக விரும்ப வேண்டும்.

## வல்லமையின் ஆவியும் ஊழிய அலுவலகமும்

2 **கொரிந்தியர்** 12:12

**அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே.**

வல்லமையின் ஆவியானவர், ஊழிய அலுவலகங்களுக்கென்று (அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, மேய்ப்பர், போதகர் மற்றும் சுவிசேஷகர்) அழைக்கப்பட்டவர்கள் மீது விசேஷித்த விதத்தில் தங்கியிருக்கிறார், குறிப்பாக அப்போஸ்தல ஊழியத்தில் இருப்பவர்கள் மீது தங்கியிருக்கிறார். அப்போஸ்தல ஊழியமானது, வல்லமையின் ஆவியானவரிடமிருந்து வரும் விசேஷித்த அபிஷேகத்திலிருந்து வெளிப்படும் அசாதாரண அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் அடையாளப்படுத்தப்படுகிறது.

## வல்லமையின் ஆவியும் நீங்களும்

தேவ ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசியின் வாழ்விலும் அவர்கள் மூலமாகவும் செயல்பட விரும்புகிறார், நம் ஒவ்வொருவருக்காகவும் தேவன் கொண்டிருக்கும் நோக்கத்தின்படியே நாம் மாறவும், அவர் திட்டமிட்டிருக்கும் அனைத்தையும் நிறைவேற்றவும் நமக்கு உதவுகிறார். இருப்பினும், நாம் அவரை எந்த அளவிற்கு செயல்பட அனுமதிக்கிறோமோ, அந்த அளவு மட்டுமே அவரால் செயல்பட முடியும், மற்றும் அதற்குமேல் அவர் செயல்பட மாட்டார். தேவனுடைய ஆவி உங்களுக்குள்ளும் உங்கள் மூலமாகவும் வல்லமையின் ஆவியாக செயல்பட நீங்கள் விரும்ப வேண்டும் மற்றும் அனுமதிக்க வேண்டும் என்று சொல்லி நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம். இயேசு கிறிஸ்து ஒருவரே சகல ஜனங்களுக்கும் கர்த்தர் என்பதை இந்த உலகம் அறிந்துகொள்வதாக!

## உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

**ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம்(கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** **(ரோமர் 6:23).** இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார்–உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது–அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்"*** **(அப்போஸ்தலர் 10:43).**

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"*** **(ரோமர் 10:9).**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான்*

*பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக. ஆமென்.*

# ஆல் பீப்பிள் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும்** ஒரு திருச்சபையும், ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒருமையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- ஒரு **உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், தேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்து ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள் நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, apcwo.org/locations ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது contact@apcwo.org க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

## இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses–Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Speaking in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work Its Original Design

புதிய புத்தகங்கள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. PDF, ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய apcwo.org/books என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு apcwo.org/sermons என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் கவுன்சிலிங்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் கவுன்சிலிங்கானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில் ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

| | |
|---|---|
| **இளம் பிராய நடத்தை** | **நடத்தையில் சீர்கேடு** |
| **பிறரோடு இணைக்கக் குறைபாடு** | **ஆளுமை குறைபாடு** |
| **உறவுமுறை சவால்கள்** | **உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்** |
| **கல்வியில் பின்தங்கிய நிலை** | **மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி** |
| **தொழில் தொடர்பான பிரச்சினைகள்** | **மது / போதைப்பொருளுக்கு அடிமை** |
| **குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்கு பின்** | **ஆவிக்குரிய போராட்டங்கள்** |
| **பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்** | **வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை** |

கிரிசலிஸ் கவுன்சிலிங் சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்காண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**Website: chrysalislife.org**

**Phone:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998

**Email: counselor@chrysalislife.org**

கிறிசலிஸ் கவுன்சிலிங் என்பது ஆல் பீப்பிள் சர்ச் ரூ வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் 'கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்' ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை "ஆல் பீப்பிள் சர்ச்"க்கு காசோலை / வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
**IFSC குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC Bank, 7M/308 80 Feet Road, HRBR Layout, Kalyan Nagar, Bengaluru, 560043, Karnataka, India

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள் சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* **apcwo.org/give** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.

**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

## DOWNLOAD THE FREE APP!

*Search for*

"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play







*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரி

**apcbiblecollege.org**

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், **திங்கள் முதல் வெள்ளி வரை,** இந்திய நேரப்படி **காலை** 9:00 **முதல் நண்பகல்** 12 **மணி வரை (UTC+5:30)** வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனுடன் இணைந்திருக்கும் தேவனாக இருக்கிறார். மேலும் அவர் பூமியின் மீது தேவனுடைய ஜனங்கள் மத்தியில் அசைவாடிக்கொண்டிருக்கிறார். அவர் பல வழிகளில் தம்மை வெளிப்படுத்துகிறார் மற்றும் தேவனுடைய ஜனங்கள் மத்தியில் கிரியைசெய்து பல்வேறு விஷயங்களைச் செய்ய அவர்களுக்கு உதவுகிறார். இந்தப் புத்தகத்தில், தேவ ஆவியானவரின் ஞானம், வெளிப்பாடு, மற்றும் வல்லமையின் அம்சங்கள் பற்றி உங்களுக்கு அறிமுகப்படுத்துவதே எங்களது நோக்கமாகும்.

தேவ ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசியின் வாழ்விலும் அவர்கள் மூலமாகவும் செயல்பட விரும்புகிறார், நம் ஒவ்வொருவருக்காகவும் தேவன் கொண்டிருக்கும் நோக்கத்தின்படியே நாம் மாறவும், அவர் திட்டமிட்டிருக்கும் அனைத்தையும் நிறைவேற்றவும் நமக்கு உதவுகிறார். இருப்பினும், நாம் அவரை எந்த அளவிற்கு செயல்பட அனுமதிக்கிறோமோ, அந்த அளவு மட்டுமே அவரால் செயல்பட முடியும், அதற்குமேல் அவர் செயல்பட மாட்டார். தேவனுடைய ஆவி உங்களுக்குள்ளும் உங்கள் மூலமாகவும் வல்லமையின் ஆவியாக செயல்பட நீங்கள் விரும்ப வேண்டும் மற்றும் அனுமதிக்க வேண்டும் என்று சொல்லி நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம். இயேசு கிறிஸ்து ஒருவரே சகல ஜனங்களுக்கும் கர்த்தர் என்பதை இந்த உலகம் அறிந்துகொள்வதாக!

**All Peoples Church & World Outreach,**
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org